
காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஐப்பசி 15 வியாழக்கிழமை 02.11.2023 கதிர் 35

# இலங்கையுடனான பௌத்த உறவுகளை மேம்படுத்த இந்தியா ரூ. 107 கோடி நிதி

## அமைச்சர் நிர்மலா சீதாராமனின் வருகையையொட்டி அறிவிப்பு



இலங்கைக்கும், இந்தியாவுக்கும் இடையிலான பௌத்த உறவுகளை மேம்படுத்துவதற்காக 107.47கோடி இந்திய ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக இந்திய நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அத்துடன், குறித்த நிதியிலிருந்து இலங்கையில் உள்ள வழிபாட்டுத் தலங்களுக்கு சூரிய சக்தி மின்திட்டத்தினை வழங்குவதற்காக 82.4கோடி இந்திய ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக இந்திய நிதி அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்திய நிதி அமைச்சர் நிர்மலா ☞ 2

## இது ரகசியம் அல்ல!

நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ மீண்டுமொருதடவைஎல்லோரையும் வியப்பில் ஆழ்த்தும் வகையிலான தகவலைவெளியிட்டுள்ளார். நாட்டுக்கு வரவேண்டிய பெருந்தொகையான டொலர் வெளிநாடுகளில் முதலீடு செய்யப்பட்டுள்ளது அல்லது வங்கிகளில் வைப்புச் செய்யப்பட்டுள்ளது என்கிறார் அமைச்சர்.

கொழும்பில் அவர் நடத்திய செய்தியாளர்கள்சந்திப்புஒன்றிலேயே அவர் இந்த அதிர்ச்சித் தகவலைத் தெரிவித்திருந்தார். இப்படி மோசடி செய்யப்பட்டிருக்கும் பணத்தொகை 55.5 பில்லியன் டொலர்கள் என்றும் தெரிவித்தார்.

கடந்த 12 ஆண்டுகளில் நாட்டிற்கு வரவேண்டியிருந்த 53.5 பில்லியன் டொலர் மற்றும் 2022இல் வரவேண்டியிருந்த 3 பில்லியன் டொலர்களுமாக மொத்தம் 55.5 பில்லியன் டொலர் வெளிநாடுகளில் முதலிடப்பட்டுள்ளன அல்லது வங்கிகளில் வைப்பிலிடப்பட்டுள்ளன என்றார்.

ஏற்றுமதி விற்பனைச் சிட்டைகளில் போலியான புள்ளிவிவரங்களை முன்வைத்து சிலர், 30 அல்லது 40 மில்லியன் டொலர் இலாபம் ஈட்டுகின்றனர் என்றும், பின்னர் அந்தப் பணத்தை வேறு நாடுகளில் முதலிடுகின்றனர் என்றும் அமைச்சர் கூறினார். ☞ 2

## சுகாதார ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பு

### நேற்று நாடு முழுவதும் நடந்தது

நாடு முழுவதும் ரீதியில் உள்ள வைத்தியசாலைகளின் சுகாதார ஊழியர்கள் நேற்றையதினம் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டதோடு கவனவீர்ப்புப் போராமட்டத்தினையும் முன்னெடுத்தனர்.

அவர்கள் தமக்கான வாழ்க்கைச்செலவு அதிகரிப்புக்கு ஏற்ப சம்பள உயர்வினை வழங்குமாறு வலியுறுத்தியதோடு, உரிய இடமாற்றங்களை தாமதமின்றி வழங்குமாறும் கோரினார்கள். ☞ 2

## 2024க்கான முழு பட்ஜெட்டையும் பார்த்த பின்பே ஆதரவு பற்றி முடிவு

### நாமல் ராஜபக்ஷ தெரிவிப்பு

2024ஆம் ஆண்டு வரவு, செலவுத்திட்டத்தை முழுமையாக ஆராய்ந்த பின்னரேயே அதனை ஆதரிப்பதாஇல்லையா என்கிற முக்கியதீர்மானம் எடுப்போமென நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பத்தரமுல்லவில் உள்ள பொது ஜன பெரமுனவின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று இடம்பெற்ற கட்சித் தலைவர்களுடனான பேச்சின் பின்னர் செய்தியாளர் ☞ 8

## மின்சார சபையை அதானிக்கு தாரைவார்க்காதே கொழும்பில் நேற்று கவனவீர்ப்புப் போராட்டம்

மின்சாரசபையை14கூறுகளாகபிரித்துபெரும்பான்மை உரிமத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்குவதற்கு அரசு எடுத்துள்ள தீர்மானத்தை திரும்பப்பெறவேண்டுமென மின்சார தொழிற்சங்கத்தின் தலைவர் ரஞ்சன் ஜயலால் தெரிவித்தார்.

நியாயமற்றமின்கட்டண அதிகரிப்பில் திருத்தம் செய்யவேண்டும் என்பதுட்பட பல கோரிக்கைகளை முன்வைத்து நாடு முழுவதும் மின்சார சபை சேவையாளர்கள்கொழும்பில் உள்ள மின்சார சபையின் தலைமை காரியாலயத்தின் முனபாகநேற்றுகவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மின்சார சபையை அதானிக்கு தரைவார்க்காதே, நியாமற்றமின்கட்டண அதிகரிப்பைதிருத்தம்செய்,சர்வதேச நாணய நிதியத்தின் கட்டளைகளுக்கு அமைய செயற்படாதே என பதாதைகளை ஏந்திய வண்ணம் போராட்டத்தில் ☞ 8

## அரச சேவையில் சிறந்து விளங்க சிட்ரா புலமைப்பரிசில் திட்டம்

### அறிமுகப்படுத்தியது அரசு

ஒரு நாட்டின் அபிவிருத்தி இலக்குகளை அடைய வலுவானபொதுச்சேவையின் அவசியத்தை உணர்ந்து, சிட்ரா புத்தாக்க ஆராய்ச்சி நிறுவனம், அரச சேவையில் சிறந்து விளங்குவதற்கான சிட்ரா புலமைப்பரிசில் திட்டத்தை ☞ 8

## சனத்தொகை கணக்கெடுப்பு நேற்று முறைப்படி ஆரம்பம்

2024 ஆம் ஆண்டு சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு ஆரம்பமானது

பத்துவருடங்களுக்கு ஒருமுறைநடத்தப்படும் சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு ஜனாதிபதிஅலுவலகத்தில் இருந்து தொடாங்கியது.

அதன்படி, இந்தசனத் தொகைகணக்கெடுப்பில் பதிவு செய்யப்பட்ட முதல் கட்டடமாக ஜனாதிபதி செயலகம் பட்டியலிடப்பட்டது. தரவு சேகரிப்பிற்கு வழமையாக பயன்படுத் ☞ 2

## பல்கலைக்கழகங்களில் இன்று வேலை நிறுத்தம்

அனைத்துப் பல்கலைக்கழகங் களிலும் இன்று வேலை நிறுத்தப் போராட்டத்தினை முன்னெடுப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக் கழகவிரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் பொதுச் செயலாளர் ☞ 8

## போராட்டக்காரர்களான தேரர் உட்பட 6 பேர் கைது

மின் கட்டண அதிகரிப்பிற்கு எதிராக திவுலப்பிட்டியவில்இருந்து மின்சக்தி அமைச்சு வரை முன்னெடுக்கப்படவிருந்த கண்டனப் பேரணியை பொலிஸார் தடுத்து நிறுத்த முற்பட்டபோதுபொலிஸாருக்கும் போராட்டக் காரர்களுக்கும்இடையில் ஏற்பட்டமுரண்பாடுகளால் தேரர் ஒருவர் உள்ளிட்ட ஆறு பேர் கைது செய்யப்பட்டதாக பொலிஸார் கூறினர்.

மின்சாரத்தை பயன்படுத்துவோர் சங்கம், பிரஜைகள் மக்கள் ஆலோசனை சபை, சிவில் அமைப்புகளின் ஒன்றியம் உள்ளிட்ட மேலும்சிலஅமைப்புகள் நேற்றையதினம் ☞ 2

## வீதி விபத்துக்களைத் தடுக்க உயர் மட்டக் குழு நியமிப்பு

வீதி விபத்துக்களினால் ஏற்படும் இறப்புக்கள் மற்றும் அங்கவீனமடைதல் ஆகியவற்றை மட்டுப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் உயர்மட்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும்ஜனாதிபதி பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பு காலிமுகத்திடல் ஹோட்டலில் நடைபெற்றபாதுகாப்பான பாதைகள் பாதுகாப்பான குழந்தைகள் என்ற 'Safe Roads - Safe Children' சர்வதேச மாநாட்டில் நேற்றுக்கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கை மருத்துவ சங்கத்தின் வீதி விபத்துக்களை கட்டுப்படுத்துவதற்கான நிபுணத்துவ குழுவினால் இந்த மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. வீதி விபத்துக்களால் தவிர்க்க முடியாத வகையில் நேரும் சிறுவர் ☞ 2

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தொழிசங்க நடவடிக்கையில் குதிப்பு

### தொடர்ந்து நடக்குமென அறிவிப்பு

தொடர்ச்சியான தொழிற்சங்க நடவடிக்கைகளைத் தொடங்குவதாக அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் அறிவித்துள்ளது.

கொழும்பில்நேற்றுக் கூடிய அச்சங்கத்தின் மத்திய குழுவானது, நவம்பர் முதலாம் திகதியிலிருந்து தொடர்ச்சியாக தொழிற்சங்க நடவடிக்கையை முன்னெடுக்கவுள்ளதாக அறிவித்துள்ளது.

இது தொடர்பில் சங்கம் விடுத்துள்ள அறிவிப்பில் தெரிவிக்கப்பட் டுள்ளதாவது:

அரசவைத்திய ☞ 8

## வரி அறவீட்டை குறைக்க வலியுறுத்திப் போராட்டம்

### நிதி அமைச்சு முன்பாக நேற்று நடந்தது

அநீதியான முறையில் அறவிடப்படும் வருமான வரியைக் குறைக்குமாறு வலியுறுத்தி தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க ஒன்றியம் நிதி அமைச்சுக்கு முன்பாக நேற்றையதினம் எதிர்ப்பில் ஈடுபட்டிருந்தது. ☞ 8

## மின் கட்டண உயர்வை எதிர்த்து குடாநாட்டில் தீபந்த போராட்டம்

### ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாட்டில்



மின்சார கட்டண அதிகரிப்புக்கு எதிராகவும் எரிபொருள் விலையேற்றத்திற்கு எதிராகவும் நேற்றிரவு யாழ். குடாநாட்டில் தீப்பந்தப் போராட்டம் நடத்தப்பட்டது.

ஐக்கிய மக்கள் சக்தியின் ஏற்பாட்டில் நடைபெற்ற போராட்டம் மாவைகலட்டி கிராமத்திலிருந்து கீரிமலை நகுலேஸ்வரர் ☞ 2

## இந்திய நிதி அமைச்சரிடம் முறையிட மீனவர்கள் முஸ்தீபு



யாழ்ப்பாணத்துக்கு வருகைதருகின்றஇந்திய நிதி மத்திய அமைச்சர் நிர்லை சந்தித்து தாங்கள் எதிர்நோக்கும் அவலங்கள் தொடர்பில் விளக்கமளிக்க உள்ளதாக யாழ்ப்பாண கிராமிய கடற்தொழில் சங்கங்களின் ☞ 2

## இனி இது .....

இப்படிப் பெரும் தொகைப் பணம் மோசடி செய்யப்படுவது குறித்து நீதி அமைச்சர் தகவல் வெளியிடுவது இது முதல் தடவையல்ல. ஏற்கனவே எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விவகாரத்திலும் அமைச்சர் இப்படியொருதகவலைவெளியிட்டுப் பரபரப்பை ஏற்படுத்தியிருந்தார்.

அப்போதும் வெளிநாட்டில் இருந்து பெரும் தொகைப் பணம் வங்கிக் கணக்கு ஒன்றுக்குச் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்த அமைச்சர் அது தொடர்பில் விசாரணை நடத்தும்படி குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தினிடம் தான் கேட்டிருக்கிறார் என்றும் தெரிவித்திருந்தார். ஆனால், இன்று வரையில் அது தொடர்பான விசாரணைக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது.

அதேபோன்று அந்தப் பணம் யாரால் யாருக்கு அனுப்பப்பட்டது என்றும் அமைச்சர் கடைசிவரை வெளிப்படுத்தவில்லை. நாடாளுமன்றத்தில் இது தொடர்பில் கேள்விகள் வலுத்த சமயம், தன்னுடன் பகிரப்பட்ட தகவலையே தான் தெரிவித்தார் என்றும் உண்மையைப் பொலிஸார் விசாரித்துக் கண்டறிவார்கள் என்றும் கூறிச் சமாளித்தார்.

இப்போது அவர் மீண்டும் ஒரு பெரும் நிதி மோசடி தொடர்பில் கருத்துத் தெரிவித்துள்ளார். இருப்பினும் அதில் யார் தொடர்புபட்டுள்ளார்கள் என்கிற விவரத்தைஅவர்தெரிவிக்கவில்லை. அதனையும்வெளிப்படுத்தி, அவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுத்து அந்தப் பணத்தைத் திரும்பப் பெற நடவடிக்கை எடுப்பதைவிட்டு, வெறும் தகவல்களாக இவற்றை மக்களுடன் பகிர்ந்துகொள்வதில் என்ன பயன் இருக்கின்றது என்று தெரியவில்லை.

இத்தகைய பரபரப்பான தகவல்களால் நாட்டுக்கு எந்த நன்மையும்கிடைக்கப்போதில்லை. வெளிநாடுகளில் முதலிடப்பட்ட பணத்தை நாட்டுக்குத் திரும்பக் கொண்டுவந்தால் மட்டுமே பயனுள்ளதாக இருக்கும். எனவே அமைச்சர் அதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## இலங்கையுடனான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)





சீதாராமன் உத்தியோகப்பூர்வ விஜயமொன்றை மேற்கொண்டு நேற்றுக் காலையில் இலங்கைக்கு வருகை தந்தார். அவரை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரிய, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் அமைச்சருமான ஜீவன் தொண்டமான், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும், கிழக்கு மாகாண ஆளுநருமான செந்தில் தொண்டமான், மற்றும்பாராளுமன்ற உறுப்பினர் மருதபாண்டி இராமேஸ்வரன், இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே ஆகியோர் வரவேற்றனர்.

### கண்டிக்குப் பயணம்

அதனைத்தொடர்ந்து இந்திய மத்தியஅமைச்சர்நிர்மலாசீதாராமன் கண்டிக்கானவிஜயத்தினைமுதலில் மேற்கொண்டார். இதன்போது அஸ்கிரிய பீடத்தின் மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரரை சந்தித்து ஆசிபெற்றார். தொடர்ந்து இந்தியாவுக்கும், இலங்கைக்கும் இடையிலான வலுவான கலாசார உறவுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இலங்கை பொருளாதார நெருக்கடிகளை சந்தித்தபோது, இந்தியா வழங்கிய முழுமையான ஆதரவுகளுக்கு மகாநாயக்கர் வரக்காகொட ஸ்ரீ ஞானரத்ன தேரர் நன்றிகளைத் தெரிவித்தார்.





அதனையடுத்து கண்டி ஸ்ரீ தலதா மாளிகைக்கு சென்ற இந்திய மத்திய அமைச்சர் நிர்மலா சீதாராமனை தியவடன நிலமே திலங்க பிரதிப்தேரர் வரவேற்றதோடு நினைவுச்சின்னத்தையும் கையளித்தார். தொடர்ந்து நினைவுக் குறிப்பேட்டில் கையொப்பமிட்ட அமைச்சர் வழிபாடுகளிலும் பங்கேற்றார்.

பின்னர், மல்வத்து பீடத்தின் மாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரரைச் சந்தித்து ஆசீர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட அமைச்சர் நிர்மலா சீதாராமன், தேரரைச் சந்தித்தமையை தான் பாக்கியமாக கருதுவதாகவும், மும்மணிகளின் ஆசீர்வாதம் அவர் ஊடாக கிட்டும் என்றும் குறிப்பிட்டார். அச்சமயத்தில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் நேரு அவர்கள் அரசியல் கைதியாக சிறையில் இருந்தபோது அநுராதபுரத்தில் உள்ள மஹா மெவுனாவில் உள்ள புத்தரின் சிலையைப் பார்த்தே மன அமைதியை அடைந்தார் என்பதை அமைச்சர் நிர்மலா சீதாரமனுக்கு நினைவுபடுத்த விரும்புவதாக மல்வத்து பீடத்தின் மாநாயக்கர் திப்பட்டுவாவே ஸ்ரீ சித்தார்த்த சுமங்கல தேரர் குறிப்பிட்டார்.

அதனைத்தொடர்ந்து கண்டி விஷ்ணு ஆலயத்துக்குச் சென்ற அவர் அங்கு வழிபாடுகளிலும் ஈடுபட்டார்.

இதன்போது அயலுறவுத்துறை இராஜாங்க அமைச்சர் தாரக்க பாலசூரியதெரிவிக்கையில், இந்தியாவினால் பௌத்த விகாரைகளை அபிவிருத்தி செய்வதற்காக 15 மில்லியன் டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. விகாரைகளில் சூரியசக்தி திட்டத்தினை முன்னெடுப்பதற்கு 10 மில்லியன் டொலர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அதனையடுத்து தோட்டத் தொழிலாளர்களுக்கான பத்தாயிரம் வீடுகளை வழங்கும் திட்டத்தின் கீழான நிகழ்வொன்றிலும் பங்கேற்கவுள்ளார் என்றார்.

### அநுராதபுரம் மற்றும் திருமலை விஜயம்

கண்டிப் பயணத்தினை நிறைவு செய்த அவர் அநுராதபுரத்தின் மகாபோதி விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டதை அடுத்து அங்கிருந்து திருகோணமலைக்குச் சென்றிருந்தார்.

கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கைதொழிலாளர்காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமானின்அழைப்பின்பேரில் கிழக்குமாகாணத்திற்குசென்றிருந்த இந்திய நிதி அமைச்சர் நிர்மலா சீதாராமனை திருகோணமலை விமான தளத்தில் ஆளுநர் செந்தில் தொண்டமான், பிரதம செயலாளர் ரத்நாயக்க உள்ளிட்டவர்கள் வரவேற்றனர்.

அவர், திருகோணமலை எண்ணெய்சேகரிப்புக்குதங்களைப் பார்வையிடவுள்ளதோடு திருகோணேஸ்வரர் ஆலத்திற்கும் செல்கிறார். அதனைத்தொடர்ந்து மலையகம் 200 நிகழ்வில் பங்கேற்கவுள்ளதோடு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன ஆகியோரைச் சந்திக்கவுள்ளதோடு யாழ்ப்பாணத்திற்கும் வருகை தரவுள்ளார்.

## சுகாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதனால்,வைத்தியசாலைகளின் தீவிர, அவசர சிகிச்சை பிரிவுகள் விசேட கிளினிக் பிரிவுகளைத் தவிர வேறு சேவைகள் மேற்கொள்ளப்படாத நிலைமைகள் நீடித்தன. நோயாளர்கள் நெருக்கடிகளுக்கு உள்ளாகினார்கள்.

யாழ்ப்பாணம் - சாவகச்சேரி வைத்தியசாலையின் ஊழியர்கள் அடையாள வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர். பருத்தித்துறை வைத்தியசாலை சுகாதார ஊழியர்களும்கவனயீர்ப்புபோராட்டத்தினை முன்னெடுத்தனர்.

கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்களும்பணிப்புறக்கணிப்பை மேற்கொண்டு, வைத்தியசாலை வளாகத்தில் கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அதேபோன்று மன்னார், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய வைத்திய சாலைகளினது சுகாதார ஊழியர்களும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்தனர்.

திருகோணமலை பொது வைத்தியசாலையின் சுகாதார ஊழியர்களும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர் எனினும் அவர்கள் வைத்தியசாலைக்கு வருகை தந்த போதிலும், பணிகளுக்கு செல்லாமல் பதாதைகளை ஏந்திய வண்ணம்தங்களுடையஎதிர்ப்பை வெளிப்படுத்தினர்.

திருகோணமலை கிண்ணியா தள வைத்தியசாலை, தோப்பூர் மூதூர் சுகாதார ஊழியர்களும் பணிப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டதோடு கவனயீர்ப்பு போராட்டத்திலும் ஈடுபட்டுள்ளனர்.

மட்டக்களப்பு மற்றும் காத்தான்குடி வைத்தியசாலையின் ஊழியர்களும் போராட்டத்தில் குதித்ததோடு, நுவரெலியா மற்றும் லிந்துலை வைத்தியசாலைகளின் ஊழியர்களுமபணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். இதனால் வைத்திய சாலைக்கு வருகை தந்திருந்த நோயாளர்கள் சேவைகளைப் பெற முடியாது சிரமப்பட்டனர்.

## மின் கட்டண....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆலயம் வரை இடம்பெற்றது.

இப்போராட்டத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஆதரவாளர்கள் கிராம மக்கள் விவசாயிகள் எனப் பலரும் கலந்துகொண் டிருந்தனர்.

## சனத்தொகை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தும் அச்சிடப்பட்ட ஆவணங்களுக்கு மேலதிகமாக நவீன தொழில்நுட்பத்துடன் டெப் கணினிகள் மற்றும் இணையம் என்பன பயன்படுத்தப்படுகிறது. புவி-இடம்சார்ந்த தொழில்நுட்பங்களாக, கணினி உதவி தனிநபர் நேர்காணலும் மேற்கொள்ளப்படுவது விசேட அம்சமாகும்.

இலங்கையின் சனத்தொகை மற்றும் வீட்டுக் கணக்கெடுப்பு ஒவ்வொரு 10 வருடங்களுக்கும் குடிசனமதிப்பீடுமற்றும்புள்ளிவிபரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வருவதோடு 2012 ஆம் ஆண்டு இறுதிக்கணக்கெடுப்புநடத்தப்பட்டது.

இலங்கையில் சட்ட ரீதியாக முதலாவது குடிசன கணக்கெடுப்பு 1871ஆம் ஆண்டு மார்ச் 27ஆம் திகதி நடத்தப்பட்டது. இது தெற்காசிய நாடுகளில் நடத்தப்பட்ட முதல் விஞ்ஞானபூர்வமான கணக்கெடுப்பாகும்.

தேசியக் கொள்கைத் தயாரிப்பிற்கும் திட்டங்களை வகுப்பதற்கும், பொது நிர்வாகம், அதன் புவியியல் ரீதியான பரம்பல், இனப் பரவல் மற்றும் மக்கள் தொகை, அவற்றில் உள்ள பல்வேறு சமூக பண்புகள் உள்ளடங்கும் வகையில் பிரதான தரவுகள் திரப்படுவதாக குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் தெரிவித்தது. ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவும் உள்ளடங்களாக இந்த பிரதான தரவுகள் திரட்டப்படுகின்றன.

இந்த மக்கள் தொகை கணக்கெடுப்பின் போது இலங்கையில் உள்ள அனைத்துகட்டிடங்களுக்கும் பூகோள அமைவிட இலக்கமொன்று வழங்கல், கிராம சேவகர் பிரிவு மட்டத்தில் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட வரைபடம் வழங்கல் என்பனவும் இந்த கணக்கெடுப்புடன் மேற்கொள்ளப்படும்.

ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிகச் செயலாளர் டபிள்யூ. ஏ.சரத்குமார், கொழும்பு மாவட்ட செயலாளர் கே.ஜி.விஜேசிறி, குடிசன மதிப்பீடு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பி.ஏ.பி.அனுரகுமார உள்ளிட்டோர் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

## போராட்டக்காரர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இணைந்து ஏற்பாடு செய்த போராட்டமானது திவுலப்பிட்டிய நகரில்இருந்துபேரணியாககொழும்பு நோக்கி முன்னெடுக்கப்பட்டபோது, திவுலப்பிட்டிய - ஹொரகஸ்முல்ல பகுதியில் பொலிஸார் தலையிட்டு பேரணியைதடுப்பதற்குநடவடிக்கை எடுத்தனர்.

இதன்போதுபோராட்டக்காரர்கள், நாம் பாதையை இடைமறிக்கவில்லை, மக்களுக்கு இடையூறு விளைவிக்கவில்லை. அரசியலமைப்பின்14ஆவது சரத்தில் கூறப்பட்டுள்ளமைக்கு அமைவாக எமது உரிமையின் கீழ் போராட்டத்தினை முன்னெடுக்கின்றோம். நாம்எமக்கு மட்டுமல்ல பொலிஸாருக்கும் சேர்த்தே போராடுகின்றேம் என்று கருத்துக்களை வெளியிட்டனர்.

இன்னும் சிலர், வீதியிலிருந்து நகராது அவ்விடத்திலேயே படுத்திருந்தனர். அத்தோடு பேரணியில் கலந்துகொண்டிருந்தசிலர்பஸ்ஸில் ஏறினர்கள். இதன்போது, பொலிஸார் அவர்களைக் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்ட 6 பேரும் மினுவாங்கொடை நீதவான் நீதிமன்றத்தில்முற்படுத்தப்பட்டு, தலா ஒருஇலட்சம்ரூபாசரீரப்பிணையில் விடுவிக்கப்பட்டனர்.

## இந்திய நிதி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்மேளனம் தெரிவித்துள்ளது.

இன்றையதினம் யாழ்ப்பாணத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே யாழ் மாவட்ட கடற்தொழிலாளர் கிராமிய அமைப்புக்களின் சம்மேளனத்தின்தலைவர்இவ்வாறு தெரிவித் துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியஅமைச்சர்ஒருவர்இலங்கைக்கு வருகை தரவு ள்ளதாக பத்திரிக்கை செய்திகளில் அறிந்து கொண்டுள்ளோம், அவர் யாழ்ப்பாணம் வருவதாகவும் அறிகின்றோம். அந்த சந்தர்ப்பத்தில் அவரை சந்தித்து இந்திய தொழிலாளர்களின் அத்துமீறிய செயற்பாடுகளினால் வடக்கு கடற் தொழிலாளர்கள் ஆகிய நாங்கள் எதிர்கொள்ளுகின்ற வாழ்வாதார பிரச்சனைகளையும், எங்கள் வளங்கள் அழிக்கப்படுவது தொடர்பாகவும், அவரின் கவனத்திற்கு கொண்டு செல்ல இருக்கின்றோம்.

ஏற்கனவே தமிழகத்துக்கு சென்று தமிழக தலைவர்களுக்கு எங்களுடைய பிரச்சனைகளை எடுத்துச் சொல்ல இருக்கின்றோம். அதற்குத் தேவையான பணத்தை சேகரிக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டுள்ளோம்.

இந்தியஅமைச்சர்யாழ்ப்பாணம் வராவிடின்கொழும்புக்குசென்றாவது அவருடன் தொடர்பு கொண்டு அவரை சந்தித்து இது விடயமாக மகஜர் கொடுக்க இருக்கின்றோம்.

கடற்தொழில் அமைச்சினால் புதிய சட்ட திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படுவதற்கு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்ட வருகின்றன, அது தொடர்பான முன்மொழிவுகள் அடங்கிய மாதிரி வரை ஒன்று வெளியிடப்பட்டுள்ளதுஇந்தசட்டதிருத்தம் அல்லது புதிய சட்டம் தொடர்பாக கடற்தொழில்அமைச்சரிடம்கதைத்திருக்கின்றோம். தற்போதுவெழியாகியுள்ள முன் வரைவை படித்து எங்களுடைய கருத்துக்களை முன்வைக்குமாறு அவர் கேட்டிருக்கின்றார். எங்களுடைய கருத்துக்கள் மாத்திரமல்ல நாடளாவிய ரீதியில் இருக்கின்ற கடற்தொழில் சார்ந்த அமைப்புகள் அனைத்தினதும் கருத்துக்ளும்கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அதுமாத்திரமல்லமுன்வைக்கப்படுகின்றஅனைத்துமுன்மொழிவுகளும் பிரஸ்தாவிக்கப்பட்டு நியாயமான விடயங்களில் திருத்தங்கள்மேற்கொண்டுபின்னர்அமைச்சரவையின் அனுமதி பெறப்பட வேண்டும். அதற்குப் பின்னர் சட்டவறிஞர் திணைக்களத்துக்கு அனுப்பி அவர்களின் அனுமதியினையும் பெற்று அதன் பின்னர் சட்டவாக்க சபையான நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து சட்டமாக அங்கீகரிக்கப்பட வேண்டும். ஆகவே கடற்தொழில் சட்ட திருத்தங்கள் தொடர்பாக ஒரு பொறுப்புள்ளஅமைப்புஎன்றரீதியில் தற்போது கருத்து கூறுவது ஆரோக்கியமானதாக இல்லை, அவ்வாறு கூறுவது மக்களை குழப்புகின்ற செயலாக மாறிவிடும்.

கடற்தொழில் அமைச்சரை சந்தித்து இது தொடர்பாக பேசி இருக்கின்றோம் காலத்துக்கு காலம் கொண்டு வரப்பட்ட கடத்தொழில் சார்ந்த சட்டங்கள் அனைத்தையும் ஒழுங்குபடுத்தும் நோக்கில் தடை செய்யப்பட்ட தொழில் முயற்சிகள் தொடர்பான தருணங்களை அதிகரித்து சட்டவிரோத தொழில் முறைகள் பயன்படுத்தப்படுவதை முழுமையாக கட்டுப்படுத்துவதன் மூலம் கடற்தொழிலாளர்களின் நிலைபேறான வாழ்வாதாரத்தை உறுதிப்படுத்தல் மற்றும் வருமானத்தை அதிகரித்து சிறந்த வாழ்க்கை தரத்தினை கடற்தொழிலாளர்களுக்கு வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டே இந்த புதிய சட்ட திருத்தங்கள் அறிமுகப்படுத்தப்படுவதாக கடற்தொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இன்னும் ஒரு விடயம் வெளிநாட்டு படகுகளுக்கு அனுமதி வழங்குவதற்கான ஏற்பாடு வரவுள்ள புதிய சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக கூறப்படுகின்றது, அது தொடர்பாக ஆராய்ந்து பார்த்திருந்தோம். உண்மையாக குறித்த சட்ட ஏற்பாடு 1979 ஆம் ஆண்டிலிருந்து சட்டமாக இருக்கின்றது, அதாவது இலங்கையிலிருந்து 200 கடல் மைல்களுக்கு அப்பால் இருக்கின்ற ஆழ்கடல் பகுதியில் மீன் பிடிக்க விரும்புகின்ற வெளிநாட்டு மீன் பிடி படகுகளுக்கு அனுமதிகளை பெற்று எமதுகொடியுடன்சென்றுமீன்பிடிக்க முடியும்என்பதுதான்இதன்அர்த்தம். பின்னர் இலங்கையில் உள்ள அனுமதிக்கப்பட்ட துறைமுகம் ஒன்றுக்கு மீன்களை கொண்டு வந்து பதப்படுத்தி வெளிநாடுகளுக்கு மீன்களை அனுப்புவதற்கு அனுமதி வழங்கும் வகையில் குறித்த சட்டம் ஏற்பாடுகள் செய்துள்ளது, அவ்வாறு பிடிக்கப்படுகின்ற மீன்களை உள்ளூர் சந்தையில் விற்பனை செய்ய முடியாது, எனவே குறித்த சட்டத்தின் ஊடாக எமது நாட்டுக்கு வருமானமும் வேலைவாய்ப்பும் அதிகரிக்கும் தவிர பாதிப்பு என்று சொல்வதற்கு இடமில்லை, குறிப்பாக இந்த சட்டத்திற்கும் இந்திய கடத்தொழிலாளர்களின்சட்டவிரோத செயற்பாட்டுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் இல்லை என்பதையும் அவற்றை கட்டுப்படுத்துவது தொடர்பான சட்டங்கள் வேறாக இருப்பதையும் உறுதிப்படுத்தி உள்ளோம்.

குறிப்பாக நடைமுறையில் உள்ள இந்திய ரோலர்களுக்கு எதிரான சட்டத்தினை நடைமுறைப் படுத்துமாறு கடை தொழில் அமைச்சரை வலியுறுத்திக் கேட்டுள்ளோம். புதிதான சட்ட திருத்த ஏற்பாடுகளை நாம் தொடர்ந்தும் அவதானித்துக் கொண்டிருக்கின்றோம் அவற்றில் எமது சமூகத்துக்கு பாதகமான விடயங்கள் உள்ளடக்கப்படுமாயின் நிச்சயமாக அவற்றை சுட்டிக்காட்டுவதுடன் தேவை ஏற்படின் எமது கருத்துக்களையும் வழிகெடுவதற்குதயாராக இருக்கின்றோம் என்பதை அனைவருக்கும் ஆணித்தரமாக அறிவித்துக் கொள்ள விரும்புகின்றேன் என தெரிவித்துள்ளார்.

## வீதி ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறப்புக்கள்,வாழ்நாள்முழுவதுமான அங்கவீனம் உள்ளிட்ட விடயங்கள்

தொடர்ச்சி 8ம் பக்கம்...

காலைக்கதிர் Kalaikkathir

# உணவு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்க நாம் அதிக கவனம் செலுத்துகின்றோம்

## டீ. பி. ஹேரத் கூறுகிறார்



உணவு உற்பத்தி செயல்முறையை நெருக்கடியின்றி பராமரிக்கவும் எதிர்காலத்தில் உணவு தட்டுப்பாடு ஏற்படாமல் இருக்கவும் அதிக கவனம் செலுத்தப்படுவதாக கால்நடை வளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் டீ. பி. ஹேரத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் கலந்துகொண்டு கருத்து தெரிவித்த அவர் -

கால்நடை அமைச்சு மக்களுக்கு தேவையான புரதத்தை வழங்கக்கூடிய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளது என குறிப்பிட்டார்.

கடந்த காலத்தில், 40 வீதமான திரவ பால் மட்டுமே உற்பத்தி செய்யப்பட்டது என்றும் இந்நிலையைக் கருத்தில் கொண்டு திரவப் பால் உற்பத்தியை இரட்டிப்பாக்க தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் டீ. பி. ஹேரத் தெரிவித்தார்.

மேலும், மேய்ச்சல் தரைகளை மேம்படுத்தவும் ஊட்டச்சத்து நிலையை அதிகரிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் கால்நடைகளுக்குத் தேவையான உணவை தட்டுப்பாடின்றி வழங்குவதன் மூலம் திரவப் பால் உற்பத்தியை அதிகரிக்க வாய்ப்பு உள்ளது.

தேசிய பால் தேவையைப் பூர்த்தி செய்வதற்காக, பால் மாவில் தங்கியிருக்கும் நிலையை மாற்றி அதற்குப் பதிலாக மாற்று முறைகளைப் பயன்படுத்த வேண்டும் என்றும் திரவப் பாலை மக்கள் இலகுவாகப் பெற்றுக்கொள்ளும் வகையில் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக கூறியுள்ளார்.

தற்போது கால்நடை தீவனம் இறக்குமதி செய்யத் தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் சோளம் பயிரிடும் விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கவும் அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் டி. பி. ஹேரத் தெரிவித்தார். (05)

# இஸ்ரேல் - பலஸ்தீன விவகாரம் 'இரு அரசு' தீர்வுக்கு ஆதரவாம்

## வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி கூறுகிறார்

ஐ.நா. பொதுச்சபையில் காஸா தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக இலங்கை வாக்களித்திருப்பதாகவும், சமாதானத்துடன்கூடிய 'இரு அரசு' தீர்வை தாம் ஆதரிப்பதாகவும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

ஹமால் அமைப்பால் கடந்த ஒக்ரோபர் மாதம் 7 ஆம் திகதி தென் இஸ்ரேலில் நடத்தப்பட்ட தாக்குதலை அடுத்து இஸ்ரேல் - ஹமாஸ் மோதல் மிகத்தீவிரமடைந்துள்ளது. இந்நிலையில் காஸா மீது இஸ்ரேலியப்படையினர் தொடர்ச்சியாக நடத்திவரும் தாக்குதல்களில் இதுவரையில் பல்லாயிரக்கணக்கானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் கடந்த 26 ஆம் திகதி கூடிய ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் ஜோர்டானால் முன்மொழியப்பட்ட காஸாவில் போர்நிறுத்தத்தை வலியுறுத்தும் தீர்மானம் 120 நாடுகளின் ஆதரவுடன் நிறைவேற்றப்பட்டது.

இவ்வாறு மேற்குறிப்பிட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்த நாடுகளில் ரஷ்யா, சீனா, பிரான்ஸ், சுவிற்ஸர்லாந்து, ஸ்பெயின் போன்ற நாடுகளுடன் இலங்கையும் உள்ளடங்குகின்றது.

அதன்படி இவ்விடயம் தொடர்பில் தனது உத்தியோகபூர்வ - எக்ஸ் - தளத்தில் (ருவிட்டர்) பதிவொன்றைச்செய்திருக்கும் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி, ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் காஸா தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானத்துக்கு ஆதரவாக இலங்கை வாக்களித்திருப்பதாகக் குறிப்பிட்டுள்ளார்.

அதுமாத்திரமன்றி 'பொதுமக்களைப் பாதுகாப்பதும், பணயக்கைதிகளாகப் பிடித்து வைக்கப்பட்டிருப்போரை விடுதலை செய்வதும், மனிதாபிமான நிலைவரத்தை உறுதிசெய்வதும், வன்முறைகள் தீவிரமடைவதைத் தடுப்பதுமே இலங்கையின் முன்னுரிமைக்குரிய விடயங்களாகும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இவ்விவகாரத்தில் சமாதானத்துடன்கூடிய 'இரு அரசு' தீர்வுக்கு இலங்கை ஆதரவளிப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.



இருப்பினும் இப்பதிவை மேற்கோள்காட்டி தமது 'எக்ஸ்' தளங்களில் பதிவிட்டுள்ள சில புத்திஜீவிகள், சர்வதேச விவகாரத்தில் இலங்கையின் கொள்கை இவ்வாறிருக்கின்ற போதிலும், உள்நாட்டில் தமிழர்கள் விவகாரத்தில் இக்கொள்கை பின்பற்றப்படாமை குறித்து கேள்வி எழுப்பியுள்ளனர். (05)

# சினோபெக் நிறுவனத்திலும் எரிபொருள் விலை மாற்றம்

சிபெட்கோ மற்றும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனங்கள் எரிபொருள் விலைகளில் திருத்தங்களை ஏற்படுத்தியுள்ள நிலையில், சினோபெக் நிறுவனமும் எரிபொருள் விலைகளில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளது.

கடந்த காலத்தில் சிபெட்கோ மற்றும் லங்கா ஐ.ஓ.சி. நிறுவனங்கள் மேற்கொண்ட எரிபொருள் விலைகளை விடவும் குறைவான விலைகளில் எரிபொருளை விற்பனை செய்துவந்த சினோபெக் நிறுவனம், இம்முறை அந்த நிறுவனங்களின் விலைகளுக்கு சமமாக தமது எரிபொருள் விலைகளையும் நிர்ணயித்துள்ளது. (05)

# கொழும்பு – திவுலப்பிட்டி பிரதான வீதியில் பதற்றம்

## 6 பேர் கைது

மின் கட்டண அதிகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து கொழும்பு - திவுலப்பிட்டி பிரதான வீதியில் மின்சார நுகர்வோர் சங்கத்தினால் நேற்று (புதன்கிழமை) பாரிய போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது மின்சார நுகர்வோர் சங்கத்தின் செயலாளர் சஞ்சீவ தம்மிக்க மற்றும் தேரரொருவர் உட்பட 6 பேரைப் பொலிஸார் கைது செய்தமையால் அப்பகுதியில் பதற்றமான சூழல் நிலவியது.

இதனையடுத்து அப்பகுதியில் போக்குவரத்துத் தடைசெய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (05)

# யாழ். இணுவில் பகுதியில் மோட்டார் சைக்கிள் திருட்டு

யாழ்ப்பாணம், சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட இணுவில் காங்கேசன்துறை வீதியில் வீட்டுக்கு முன் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 5 லட்சம் ரூபா பெறுமதியான பல்சர் ரக மோட்டார் சைக்கிள் ஒன்று திருடி செல்லப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது.

மேற்படி சம்பவம் தொடர்பில் மோட்டார் சைக்கிள் உரிமையாளரால் சுன்னாகம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. கடந்த வாரமும் இணுவில் பகுதியில் இவ்வாறான ஒரு திருட்டு சம்பவம் இடம்பெற்றிருந்த நிலையில் கடந்த திங்கட்கிழமை இந்தத் திருட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அண்மைய நாள்களில் யாழ்ப்பாண குடாநாட்டில் பெறுமதியான மோட்டார்சைக்கிள் திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளதோடு திருடப்படும் மோட்டார்சைக்கிள்களைப் பயன்படுத்தி வழிப்பறிகளும் கொள்ளைகளும் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.(05)

# மாணவர்களுக்கு சலுகை விலையில் புத்தகங்களை வழங்கத் தீர்மானம்

அரசஅச்சகக்கூட்டுத்தாபனத்தால் அனைத்துப் பாடசாலைகளுக்கும் முப்பது வீதச் சலுகையில் பயிற்சிப் புத்தகங்களை வழங்குவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, பாடசாலைகளில் பயிற்சிப் புத்தகங்களை பெற்றுக் கொள்வது தொடர்பில் சுற்றறிக்கை வெளியிடவுள்ளதாக கல்வி அமைச்சர் கலாநிதி சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார்.

அரச அச்சக சட்டப்படுத்தப்பட்ட கழகம் நூற்று இருபத்தைந்து கோடி ரூபா லாபம் ஈட்டியுள்ளதாகவும், தேவையான அளவு புத்தக அச்சிடுவதற்கு கழகம் தயாராக உள்ளதாகவும், தற்போது மாநகராட்சிக்கு காகித தட்டுப்பாடு இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.(05)

# வெலிசறை இருதய வைத்தியசாலை மின்னல் தாக்கத்தால் பாதிப்படைவு

வெலிசறை இருதய வைத்தியசாலையில் திங்கட்கிழமை மின்னல் தாக்கியுள்ளதாக வைத்தியசாலை பணிப்பாளர் வைத்தியர் டி.எல்.வனிகரத்ன தெரிவித்துள்ளார்.

இதனால் வைத்தியசாலையின் கதிரியக்க பிரிவில் இருந்த அத்தியாவசிய இயந்திரங்கள் பல சேதமடைந்துள்ளதோடு மின்னல் தாக்கத்தால் வைத்தியசாலையின் கணனி அமைப்பும் முற்றாக செயலிழந்துள்ளதாக பணிப்பாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார். மின்னல் தாக்கத்தின் பின்னர் வைத்தியசாலையின் எக்ஸ்ரே இயந்திரங்கள் இயங்காததால் வைத்தியசாலையில் நோயாளர்களுக்கு மேற்கொள்ளப்படும் சி.டி. ஸ்கேன் இடைநிறுத்தப்பட்டுள்ளதோடு தற்போது வைத்தியசாலையின் கணனி அமைப்பை வழமைக்கு கொண்டுவர நடவடிக்கை எடுத்து வருவதாகவும் இயக்குநர் தெரிவித்துள்ளார்.

வெலிசர இருதய வைத்தியசாலையின் ஒரு பகுதியில் மாத்திரமே மின்னல் கம்பிகள் பொருத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கும் பணிப்பாளர், திங்கட்கிழமை வைத்தியசாலையில் மின்னல் தாக்கியதால் ஊழியர்களுக்கோ, நோயாளர்களுக்கோ பாரிய விபத்து எதுவும் ஏற்படவில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

மின்னல் தாக்கத்தால் வைத்தியசாலைக்கு ஏற்பட்ட இழப்பு இதுவரை மதிப்பிடப்படவில்லை எனவும், பழுதடைந்த இயந்திரங்களை விரைவில் மீளமைக்கத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன எனவும் வைத்தியசாலையின் பணிப்பாளர் குறிப்பிட்டுள்ளார்.(05)

# மனைவியின் கடவுச்சீட்டில் வேறு பெண்ணுடன் இத்தாலிக்கு பயணிக்க முயன்ற நபர் கைது

கொழும்பு, நவ. 02

மனைவியின் கடவுச்சீட்டைப் பயன்படுத்தி மற்றொரு பெண்ணை இத்தாலிக்கு அழைத்துச் செல்ல முயன்ற யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபரை குடிவரவு திணைக்களத்தினர் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து செவ்வாய்க் கிழமை பிற்பகல் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் பகுதியைச் சேர்ந்த சந்தேகநபர், தனது ஐந்து வயது மகன் மற்றும் அவரது மனைவி என குறிப்பிடப்பட்ட காங்கேசன் துறையைச் சேர்ந்த 29 வயதுடைய பெண் ஒருவருடன் இத்தாலி செல்வதற்காக செவ்வாய்க்கிழமை மதியம் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்துள்ளார். 1.45 மணிக்கு அவர்கள் விமானத்தில் பயணிக்கவிருந்தனர்.

அவர்கள் குடியகல்வு சாளரத்தில் தமது பயண ஆவணங்களை வழங்கியபோது, அவர்களின் நம்பகத்தன்மை குறித்து சந்தேகங்கள் எழத் தொடங்கின. அவர்கள் மூவரும் எல்லை ஆய்வுப் பிரிவிடம் பரிந்துரைக்கப்பட்டனர்.

அங்கு நடத்தப்பட்ட தொழிநுட்ப சோதனைகள் மற்றும் முதற்கட்ட விசாரணைகளின்போது, இந்த சிறு குழந்தை, சந்தேக நபருடையது எனினும், இந்த பெண் அவர்களது குடும்பத்தின் மனைவியோ அல்லது தாயோ அல்ல என்றும், வேறு பெண் என்றும் தெரிய வந்தது.

இந்த நபர் கடந்த சில வாரங்களுக்கு முன்னர் இலங்கை வந்த போது இத்தாலியில் உள்ள தனது மனைவியின் கடவுச் சீட்டை கொண்டுவந்து கட்டுநாயக்க விமான நிலையத்தின் குடிவரவு முத்திரையை போலியாக தயாரித்து வைத்திருந்தார் எனவும் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

அந்த கடவுச்சீட்டை பயன்படுத்தி வேறொரு பெண்ணை இத்தாலிக்கு அழைத்துச்செல்ல முயற்சித்த அவர், இதற்கு முன்னர் மனைவியின் கடவுச் சீட்டை பயன்படுத்தி மேலும் ஒரு பெண்ணை இத்தாலிக்கு அழைத்துச் சென்றது தெரிய வந்துள்ளது.

அதன்படி, குடிவரவு குடியகல்வு திணைக்களத்தினரால் மூவரும் மேலதிக விசாரணைகளுக்காக கட்டுநாயக்க விமான நிலைய குற்றப் புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (05)

காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## பொருத்தமற்ற கொள்கைகளால் அவலப்படும் அப்பாவி மக்கள்

மின்சாரக் கட்டணம் எக்கச்சக்கமாக அதிகரிப்பு, பெற்றோலியப் பொருள்களின் விலைகள் அதிகரிப்பு, பொருள்களின் விலைகள் அதிகரிப்பு என்று துன்பப்படும் மக்களைப் பற்றி அக்கறை கொள்ளாது, ஆட்சியாளர்கள் பொருள்களின் பெறுமதி சேர் வரியையும் (வற்) 18 சதவீதம் அதிகரித்து மக்களின் துன்பங்களை இன்னும் தீவிரப்படுத்தியுள்ளார்கள்.

இதனைக் கண்டித்துள்ள ஐக்கிய மக்கள் சக்தியின் (ரீமூய) நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, அரச வருவாயை அதிகரிப்பதற்கான ஆட்சியாளர்களின் முயற்சிகள் ஏற்றுக்கொள்ளத்தக்கது, ஆனால் எந்த வரியை அதிகரிக்க வேண்டும் மற்றும் யாரிடமிருந்து வரி வசூலிக்கப்பட வேண்டும் என்பதை அது நன்கு புரிந்து கொண்டு அதனை முன்னெடுக்கவேண்டும் என்று தெரிவித்துள்ளார்.

ஆட்சியாளர்களின் இயலாமையினால், சாதாரண மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாவதை தடுக்க முடியாது என தெரிவிப்பது முற்றிலும் ஏற்புடைய கருத்தே. அரச வருவாயைப் பெருக்குவதற்குக் கட்டணங்களை உயர்த்துவது வரியை அதிகரிப்பது என்பதைத் தவிர ஆட்சியாளர்களிடம் வேறு எந்த மாற்று ஏற்பாடுகளும் இல்லை. தனிநபர் வருமான வரி, மதுபானம் மற்றும் சிகரெட் போன்றவற்றின் மீதான வரிகளை ஆட்சியாளர்கள் உயர்த்தியபோதும் அவற்றினால் எதிர்பார்க்கப்பட்ட வருமான அதிகரிப்பைப் பெற முடியாத நிலையில் ஏழை எளிய மக்கள் ஒவ்வொருவரையும் பாதிக்கும் வகையில் வற் வரியை அதிகரித்து தனது தேவையைப் பூர்த்தி செய்ய ஆட்சியாளர்கள் முயல்வது அபத்தம்.

'வற் வரி 15% இலிருந்து 18% ஆக உயர்த்தப்படும் போது, அது குறிப்பாக குறைந்த வருமானம் பெறுபவர்களை பாதிக்கும். இது ஏழைகளுக்கு மேலும் சுமையை ஏற்படுத்தும். அமைச்சர் பந்துல குணவர்தன செய்தியாளர்களிடம் கருத்துத் தெரிவித்தபோது 2023 ஜனவரி முதல் செப்டம்பர் வரை அரச வருமானம் 50% அதிகரித்துள்ளதாகக் கூறினார். பின்னர் ஏன் வற் வரி அதிகரிக்கப்படுகிறது?' என நாடாளுமன்ற உறுப்பினர் விக்கிரமரத்ன கேள்வி எழுப்பினார்.

அந்தக் கேள்வி நியாயமானதே. அரசியல்வாதிகள் தாம்விட்ட தவறுகளால் இந்த நாட்டின் பொருளாதாரத்தைச் சிதைத்தார்கள். நாட்டைத் திவாலாக்கினார்கள். அவர்களின் தூர நோக்கற்ற செயல்களால் பிரச்சினைகளை அதிகரித்தார்கள். 2019இல் அதிகாரத்திற்கு வந்த கோட்டாபய ராஜபக் ஷ ஆட்சி சகட்டு மேனிக்கு வரிகளைக் குறைத்தது. அதுவரை இருந்து வந்த தனிநபர் வருமானத்தின் மீது செலுத்தப்படும் உடனடி நேரடி வரியை நீக்கினார்கள். என்பிரி (ஹியவீ) வரி நீக்கப்பட்டது, மேலும் வற் 15% இலிருந்து 8% ஆக குறைக்கப்பட்டது. சேமிப்பு வட்டி மீதான தடுப்பு வரியும் நீக்கப்பட்டது. 'டெபிட்' வரி மற்றும் பங்குச் சந்தை திரும்புதலுக்கான மூலதன வரியும் என்பனவும் நீக்கப்பட்டன.

இதனால் நாட்டின் வருமானம் மூன்றில் ஒரு பங்கு சரிந்தது.ஒரு அரசாங்கம் வரி வருமானத்தில் இயங்குகிறது என்பதை புரிந்து கொள்ளும் அறிவும் அறிவும் இந்த ஆட்சியாளர்களுக்கு இருந்ததாகத் தெரியவில்லை. நிர்வாகம் மற்றும் நிதி முகாமைத்துவம் தொடர்பில் அறிவியல் ரீதியாகவும், பகுத்தறிவுரீதியாகவும் அணுகித் தீர்மானங்களை மேற்கொள்ளும் திறன் இந்த ஆட்சியிடம் இருக்கவில்லை. இவ்வாறு நடந்துகொண்டு முந்தைய ஆட்சியாளர்கள் நாட்டைக் குட்டிச்சுவராக்கி நாசப்படுத்தினார்கள் என்றால், தற்போதைய ஆட்சி எல்லாச் சுமைகளையும் அப்பாவி மக்கள் மீது சுத்திக் குளிர்காய்கின்றது. இரண்டு போக்குகளுமே பொருத்தமானவை அல்ல. மக்கள் மீது அளவுக்கு மீறிய சுமையை ஏற்றுவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது. ஆர்ப்பாட்டங்கள், போராட்டங்களைத் தொடர்ந்து அரச ஊழியர்களுக்கான சம்பளம் அதிகரிக்கப்படும் என்று அமைச்சரவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் அரசின் செலவினம் மேலும் அதிகரிக்கப்படவுள்ளது. அரச செலவுகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்காத ஆட்சியாளர்கள், அந்தச் சுமைகளையும் மக்கள் மீதே தொடர்ந்தும் சுமத்துவது மீண்டும் ஒரு மக்கள் கிளர்ச்சிக்கே வழி வகுக்கும்.






## முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சுகாதார ஊழியர்கள் பணிப்புறக்கணிப்பு

சம்பள உயர்வு உட்பட ஒன்பது கோரிக்கைகளை வலியுறுத்தி நேற்று (புதன்கிழமை) முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் சுகாதார பணியாளர்கள் பணிபகிஷ்கரிப்பை மேற்கொண்டனர்.

நாட்டிலுள்ள அனைத்து மருத்துவமனைகளில் சுகாதார ஊழியர்கள் நேற்று (புதன்கிழமை) தங்கள் கோரிக்கைகளை முன்வைத்து தொழிற்சங்க போராட்டம் ஒன்றை மேற்கொண்டார்கள்.

அந்த வகையில் முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலையில் பணியாற்றும் சுகாதார ஊழியர்களும் காலை ஏழு மணி தொடக்கம் 12.00 மணிவரை தொழிற்சங்க போராட்ட நடவடிக்கையில் குதித்துள்ளார்கள்.

முல்லை தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு முல்லைத்தீவு, வெலிஓயா,ஒட்டி சுட்டான், மல்லாவி, மாங்குளம், உள்ளிட்ட பகுதிகளில் மக்களுக்கு சேவை ஆற்றி வரும் அரச வைத்தியசாலைகளில் பணியாற்றும் சிற்றூழியர்கள் அனைவரும் பணி புறக்கணிப்பில் ஈடுபட்டார்கள்.

சுகாதார ஊழியர்களின் கோரிக்கையாக, சுகாதார ஊழியர்கள் தற்போது வாழ்க்கைக்கு வாழ முடியாத நிலமையொன்று உருவாக்கியுள்ளது.

1. சுகாதார ஊழியர்களுக்காக 5 நாள் வேலைத் திட்டத்தை வழங்கல். (வாரத்திற்கு 40 மணித்தியாலங்கள்)

2. மத்திய அரசின் மற்றும் மாகாண சுகாதார நிறுவனங்களில் அனைத்து ஊழியர்களுக்காக மேலதிக நேர கொடுப்பனவு / விடுமுறை தின சம்பள வரையறையை நீக்குதல்.

3. மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பாக ரேட் முறையை வழங்குதல் (இதுவரையிலும் வைத்தியர், தாதியர், இடை நிலை வைத்தியர் மற்றும் துணை வைத்தியர் சேவைகளுக்கு வழங்கப்பட்டுள்ளது.)

4. தற்போது வழங்கப்படும் ரூபா.1000/= விசேட கொடுப்பனவு ரூபா.7000/= வரை அதிகரித்துக் கொள்வது, சீருடை கொடுப்பனவு ரூபா.15000/= வரை அதிகரித்துக்கொள்வது.

5. முறையான இடமாற்ற முறையொன்று மற்றும் இடமாற்றம் விரைவாக வழங்குதல்.

6. ஓய்வூதிய சம்பளத்தை உறுதிப்படுத்துதல்.

7. ஊழியர் பற்றாக்குறையின் போது ஆட்சேர்ப்பு செய்தல் / அனைத்து பதவி உயர்வுகள் வழங்குவது தொடர்பாக முன் நடவடிக்கைகள் எடுத்தல்.

8. மருந்துகள் மற்றும் உபகரணங்கள் பற்றாக் குறையை விரைவாக நிவர்த்தி செய்தல் மற்றும் சத்திரசிகிச்சைகள் வழமைபோல் நடத்துதல்.

9. நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுப்பதற்காக ரூபா.20,000/= இனால் சம்பளத்தை அதிகரித்தல், உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து அரசுக்கு அழுத்தம் கொடுக்கும் வகையில் இந்த பணி புறக்கணிப்பு போராட்டத்தை முன்னெடுத்துள்ளார்கள். (05)

## அமெரிக்க விசா மறுக்கப்பட்ட வீரசேகர சீனாவிற்கு பாராட்டு

அமெரிக்கா விசா மறுத்துள்ள நாடாளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர ஆசியாவின் தவிர்க்க முடியாத நம்பகமான நண்பன் சீனா என அந்த நாட்டுக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.

பிஓஏஓ உச்சிமாநாட்டில் உரையாற்றுகையில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

ஆசிய நாடுகளுக்கு இடையிலான பிணைப்பை நெருக்கத்தை மேற்குலகால் ஒருபோதும் புரிந்து கொள்ள முடியாது என அவர் தெரிவித்துள்ளார்.

இந்த பிணைப்பு வர்த்தகம்- மூலமும் முக்கியமாக பௌத்தம் மூலமும் வளர்ச்சியடைந்தது வளர்த்தெடுக்கப்பட்டது எனக் குறிப்பிட்டுள்ள சரத்வீரசேகர, சீனா ஆசியாவின் தவிர்க்க முடியாத நம்பகத் தன்மை மிக்க நண்பன் எனவும் தெரிவித்துள்ளார்.

மனித உரிமை பேரவையில் பாதுகாப்பு சபையின் நிரந்தர உறுப்பு நாடான சீனா இலங்கைக்கு தொடர்ச்சியாக அளித்து-வரும் ஆதரவிற்கு நாங்;கள் நன்றியுடையவர்களாக உள்ளோம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

உலகின் ஈவிரக்கமற்ற அமைப்பை நாங்கள் தோற்கடித்த வேளை மேற்கு உலக நாடுகள் எங்களை குற்றவாளிகளாக்கின. ஆனால் சீனா எங்களுக்கு ஆத



ரவாக இருந்தது எனவும் சரத்வீரசேகர தெரிவித்துள்ளார். (05)

# கடல் முகாமைத்துவம் 'நாரா' வசமிருப்பதால் வருடாந்தம் 200 மில்லியன் டொலர் இழப்பாம்

## விஜயதாஸ ராஜபக்ஷ தகவல்



இலங்கையின் கடற்பிராந்தியத்தை நிர்வகிக்கும் பொறுப்பு தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்திடம் (நாரா) ஒப்படைக்கப்பட்டிருப்பதன் காரணமாக சுமார் 32 ஆண்டுகளாக நாட்டுக்கு வருடாந்தம் 200 மில்லியன் டொலர் நட்டம் ஏற்பட்டிருப்பதாக நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே, இந்தப் பொறுப்பை திறம்பட முன்னெடுப்பதற்கு ஏற்றவாறு தேசிய நீர்வரைவியல் காரியாலயத்தை உருவாக்கும் நோக்கில் இலங்கை நீர்வரைவியல் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருப்பதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் நோக்கில் கொழும்பில் அமைந்துள்ள நீதியமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் கூறியவை வருமாறு -

இலங்கைக்குச் சொந்தமான கடற்பிராந்தியத்தை நிர்வகிப்பதுடன் தொடர்புடைய இலங்கை நீர்வரைவியல் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றோம்.

கடற்பிராந்தியத்தில் உயிர்களின் பாதுகாப்புக்கான சர்வதேச பிரகடனத்தை அடிப்படையாகக்கொண்டே சகல நாடுகளும் அவற்றின் கடற்பிராந்தியத்தை நிர்வகிக்கின்றன.

தமது கடற்பரப்பின் ஊடாகப் பயணிக்கும் கப்பல்களுக்கான கட்டணம் அறவிடல், கடற்பிராந்தியப் பாதுகாப்பின் மூலம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தல், கடற்சூழலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புக்களைக் குறைத்தல் போன்ற நடவடிக்கைகள் இப்பிரகடனத்தின் அடிப்படையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன.

இவ்வாறானதொரு பின்னணியில் இலங்கை, இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் கேந்திர நிலைய முக்கியத்துவம் வாய்ந்த பகுதியில் அமைந்திருக்கின்றது. உலகின் ஏனைய அனைத்துப் பிராந்தியங்களுக்குமான நுழைவாயிலாகவும், பொருளாதார மற்றும் வாணிப ரீதியில் பெருமளவான நன்மைகளை ஈட்டித்தரக்கூடிய வகையிலும் இலங்கையின் அமைவிடம் உள்ளது. இலங்கைக் கடற்பரப்பின் ஊடாக நாளாந்தம் சுமார் 200 - 300 வரையான கப்பல்களும், வருடாந்தம் சுமார் 35 ஆயிரம் கப்பல்களும் பயணிக்கின்றன. இவ்வாறு எமது கடற்பரப்பின் ஊடாகப் பயணிக்கு கப்பல்களிடமிருந்து அதற்கேற்றவாறு கட்டணம் அறவிடப்படும்.

அதற்குரிய அதிகாரம் கடந்த 1981 ஆம் ஆண்டு கொண்டுவரப்பட்ட சட்டத்தின் மூலம் தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு நிறுவனத்துக்கு (நாரா) வழங்கப்பட்டுள்ளது. இருப்பினும் கடற்பிராந்திய விவகாரங்களை உரியவாறு கையாள்வதற்கான நிபுணத்துவம் அக்கட்டமைப்புக்கு இல்லை. அதன் விளைவாக கடந்த 32 ஆண்டுகளாக (1981 தொடக்கம்) எமது நாட்டுக்கு வருடாந்தம் 200 மில்லியன் டொலர் நட்டம் ஏற்பட்டுள்ளது. அதுமாத்திரமன்றி எமது கடற்பிராந்தியத்தை உரியவாறு நிர்வகிப்பதற்கும், அதனுடன் தொடர்புடைய தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் ஏற்ற பொருத்தமான கட்டமைப்பு இன்மையால், அதுபற்றிய தீர்மானங்கள் ஏனைய வெளிநாட்டு நிறுவனங்களால் மேற்கொள்ளப்படுகின்றன. இது நாட்டுக்கான வருமானத்தை இல்லாமல்செய்வதுடன் தேசிய பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலாக அமைந்திருக்கின்றது.

குறிப்பாக கொழும்பு துறைமுகத்துக்கு வருகைதந்த கப்பல்களின் எண்ணிக்கை கடந்த 2015 ஆம் ஆண்டு 4,197 ஆகப் பதிவாகியிருந்த நிலையில், அது 2022 இல் 3,648 ஆக வீழ்ச்சியடைந்துள்ளது. அதேபோன்று 2015 ஆம் ஆண்டு திருகோணமலை துறைமுகம், காலி துறைமுகம், காங்கேசன்துறை மற்றும் காரைநகர் துறைமுகம் ஆகியவற்றுக்கு வருகைதந்த கப்பல்களின் எண்ணிக்கை முறையே 164, 72, 32 ஆகப் பதிவாகியுள்ளன. இருப்பினும் கடந்த ஆண்டு அவை முறையே 95, 7 மற்றும் 0 ஆக வீழ்ச்சிகண்டுள்ளன.

இவையனைத்தையும் கருத்திற்கொண்டு எமது நாட்டுக்குரிய கடற்பிராந்தியத்தை முறையாக நிர்வகிக்கும் நோக்கிலேயே தேசிய நீர்வள ஆராய்ச்சி மற்றும் மேம் பாட்டு நிறுவனத்தின் எதிர்ப்பையும் மீறி இலங்கை நீர்வரைவியல் சட்டமூலத்தைத் தயாரித்து, பாராளுமன்றத்தில் சமர்ப்பித்திருக்கின்றோம். இச்சட்டமூலத்தின் ஊடாக தேசிய நீர்வரைவியல் காரியாலயம் என்ற புதிய கட்டமைப்பு ஸ்தாபிக்கப்பட்டு, அதற்கான தலைமைத்துவத்தை வழங்கும் விதமாக சிரேஷ்ட நீர்வரைவியலாளர் என்ற பதவி உருவாக்கப்பட்டு, அதற்குப் பொருத்தமான ஒருவர் நியமிக்கப்படுவார். அதன்மூலம் நாட்டின் கடற்பிராந்தியத்தை முறையாக நிர்வகிக்கவும், அதனூடாக வருமானமீட்டவும் முடியும் என்று தெரிவித்தார். (05)

# தேசிய மொழிக் கல்வி, பயிற்சி நிறுவனத்தின் பணிப்பாளர் சபை கூண்டோடு பதவிநீக்கம்

பொது நிர்வாகம், உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் என்ற வகையில், பிரதமர் தினேஷ் குணவர்தன, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்களை பதவி நீக்கம் செய்துள்ளார்.

குறித்த நிறுவனத்துக்குப் புதிய முகாமைத்துவ சபையொன்றை நியமிக்க திட்டமிடப்பட்டுள்ள நிலையில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பிரதமர் விசேட வர்த்தமானி மூலம் அறிவித்துள்ளார்.

இதன்படி, தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் தலைவர் ஜயம்பதி பண்டார ஹீன்கெந்த, அதன் ஏனைய பணிப்பாளர் சபை உறுப்பினர்களான கலாநிதி டபிள்யூ. கே. கொழும்பகே , விதுர்ன் வின்சேந்துரராஜன், என். ஜி. எஸ். எச். எம். நௌத் மற்றும் தினுக் ஹெட்டியாராச்சி ஆகியோரே பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.

மேலும், தேசிய மொழிக் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் உறுப்பினர்களையும் பதவி நீக்கியுள்ளார். (05)




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vagetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swhppees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒழுக்கக்கோவையை மீறுவோரைப் பதவி நீக்குவதற்கு ஏதுவான சட்டமூலம் தயார்

## நீதியமைச்சர் விஜயதாஸ அதிரடி

நாடாளுமன்ற உறுப்பினர் தராதரம் தொடர்பான சட்டமூலத்தின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்கள் பின்பற்றி நடக்கவேண்டிய ஒழுக்கக்கோவை தயாரிக்கப்படும் எனவும், அதனை மீறுபவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்புரிமை இரத்துச்செய்யப்படக்கூடிய சாத்தியம் உள்ளதாகவும் நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சட்டமூலங்கள் தொடர்பில் விளக்கமளிக்கும் நோக்கில் கொழும்பில் அமைந்துள்ள நீதியமைச்சில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுபற்றி அவர் மேலும் கூறியவை வருமாறு -

பிரதமரும் நானும் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் தராதரம் தொடர்பான சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிப்பதற்கு முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. அதன்படி நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான பிரத்தியேக ஒழுக்கக்கோவை தயாரிக்கப்பட்டு, அவர்கள் அதற்கமைவாக செயற்படவேண்டும் என்ற நிர்ப்பந்தம் ஏற்படுத்தப்படும்.

அண்மைய காலங்களில் நாட்டுமக்கள் மத்தியில் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மீதான நம்பிக்கை வெகுவாக வீழ்ச்சியடைந்திருக்கின்றது. அரச ஊழியர்களுக்கு அச்சுறுத்தல் விடுத்தல், ஊழல் மோசடிகளில் ஈடுபடல், அரச சேவை உள்ளிட்ட பல்வேறு விவகாரங்களில் அநாவசிய தலையீடுகளை மேற்கொள்ளல் உள்ளிட்ட பல்வேறு காரணங்களால் தமது பிரதிநிதிகளான நாடாளுமன்ற உறுப்பினர்கள்மீது மக்கள் நம்பிக்கை இழந்திருக்கின்றார்கள். இந்த நிலை தொடருமேயானால், கடந்த வருடத்தைப்போன்று நாடு மீண்டும் மிக மோசமான வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்படும்.

எனவே வெறுமனே கட்டமைப்பு ரீதியான மாற்றத்தை ஏற் படுத்துவது குறித்துப் பேசிக்கொண்டிருப்பதை விடுத்து, அதனை முன்னிறுத்திய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதற்காகவே நாம் இந்த யோசனையை முன்வைத்தோம்.

குறிப்பாகக் கடந்த காலங்களில் அரசமைப்புக்கான 21ஆவது திருத்தம், புதிய மத்திய வங்கிச் சட்டம், தேர்தல் செலவினங்களை ஒழுங்குபடுத்தும் சட்டம், ஊழல் ஒழிப்பு சட்டம் போன்றவற்றின் ஊடாக நாட்டில் கட்டமைப்பு ரீதியில் நேர் மறையான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

அதன் நீட்சியாகவே தற்போது நாடாளுமன்ற உறுப்பினர் தராதரம் தொடர்பான சட்டமூலத்தின் ஊடாக நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கென பிரத்தியேகமாக ஒழுக்கக் கோவை ஒன்றைத் தயாரித்து, அதன்பிரகாரம் அவர்கள் செயற்படவேண்டியது கட்டயமாக்கப்படும். அதுமாத்திரமன்றி, இந்தச் சட்டமூலத்தின்கீழ் ஓய்வுபெற்ற நீதியரசர் தலைமையில் விசேட குழுவொன்று நியமிக்கப்படும். எனவே மேற்குறிப்பிட்ட ஒழுக்கக்கோவையை மீறிசெயற்படுகின்ற மற்றும் ஊழல் மோசடிகளில் ஈடுபடுகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்பில் அக்குழுவிடம் முறைப்பாடளிக்கமுடியும்.

அம்முறைப்பாடுகள் தொடர்பில் குறித்த குழு விசாரணைகளை மேற்கொண்டு, சம்பந்தப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினருக்கு வழங்கப்படவேண்டிய தண்டனையைத் தீர்மானிக்கும். உச்சபட்சமாக குறித்த நாடாளுமன்ற உறுப்பினரின் உறுப்புரிமையை நீக்குவதற்கான அதிகாரமும் அக்குழுவுக்கு வழங்கப்படும். - என்றார். (05)

# நீர்கொழும்பு - கொழும்பு இடையிலான தனியார் பஸ்கள் பணிப் புறக்கணிப்பு

வழித்தட இலக்கம் 187 கட்டுநாயக்க விமான நிலையம் - கோட்டை, ஜா- எல - கோட்டை, வழித்தட இலக்கம் 188 ரத்தொழுகம - கோட்டை ஆகிய பகுதிகளுக்காக சாதாரண மற்றும் சொகுசு பஸ்கள் நேற்று (புதன்கிழமை) காலை 7.00 மணி முதல் சேவையை நிறுத்தி பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டன என கம்பஹா மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர்களின் சங்கத்தின் தலைவர் லம்பேர்ட் மதுரகே தெரிவித்தார்.

கம்பஹா இல - 01 அலுவலக முகாமையாளரின் தன்னிச்சையான நடவடிக்கைக்கு எதிராகவே இந்தப் பணிப்புறக்கணிப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிரந்தர மற்றும் இடைக்கால நேர அட்டவணையை வழங்க பஸ் உரிமையாளர்கள் மற்றும் பஸ் ஊழியர்களிடம் இலஞ்சம் கோருவது, மாவட்டத்தில் பஸ்கள் அதிகமாக இருந்தும் புதிய பஸ்களுக்கு கேள்விப் பத்திரம் கோருவது உட்பட்ட பல குற்றச்சாட்டுகளை முன்வைத்தே இந்தப் பணிப் பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்பட்டது.(05)

# மஸ்கெலியா புரவுன்ஷீக் பகுதியில் வீதி தாழிறக்கம்

பலத்த மழை காரணமாக மஸ்கெலியா பொலிஸ் பிரிவிலுள்ள பிரவுன்சிக் தோட்டம், கெஸ்கீபன் பிரி விற்கு செல்லும் பிரதான வீதி செவ்வாய்க்கிழமை தாழ் இறங்கியுள்ளது.

இதனால் அப் பகுதியில் உள்ள சின்ன நடுத்தோட்டம், லெட்சுமி தோட்டம், பாளுகாமம் ஆகிய பிரிவுகளில் உள்ள மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், பலத்த மழை பெய்யும் பட்சத்தில் அப்பகுதி பாரிய அளவில் தாழ் இறங்கும் அபாயம் உள்ளது என அப் பகுதியில் உள்ள மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதி அருகில் சாமிமலை ஆறு பெருக்கெடுத்து ஓடுவதால் எந்த நேரத்திலும் இப்பகுதி பாரிய அளவில் தாழ் இறங்கும் அபாயம் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# தரமற்ற மருந்து பொருள்களை இறக்குமதி செய்தவர் கைது

போலி ஆவணங்களைத் தயாரித்து, தரமற்ற மருந்து வகைகளை இறக்குமதி செய்த குற்றச்சாட்டின் பேரில் சந்தேகநபர் ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக் கள அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

தரமற்ற இம்யூனோகுளோபுலின் தடுப்பூசி குப்பிகளை இறக்குமதி செய்த நிறுவனம் ஒன்றின் உரிமையாளரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை குற்றப் புலனாய்வு திணைக்கள அதிகாரிகள் மேற் கொண்டுள்ளனர். (05)

# சுகாதார சேவைகள் தொழிற்சங்கம் சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம்





கிளிநொச்சியில் நேற்று நடந்தது

சுகாதார ஊழியர்கள் நேற்று (புதன்கிழமை) சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை கிளிநொச்சி வைத்தியசாலை முன்பாக மேற்கொண்டனர்.

சம்பளம் 2016 இன் பின் அதிகரிக்கப்படவில்லை என்பதோடு, கிழமையில் ஐந்து நாள்கள் வேலை உள்ளிட்ட பல அம்ச கோரிக்கைகளை அடிப்படையாகக்கொண்டு நேற்று மு.ப 7.00 தொடக்கம் மதியம் 12.00 வரை சுகாதார சேவை தொழிற் சங்க கூட்டணியாக ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்துள்ளனர்.(05)

# அதிக மீனகள் பிடிபடுவதால் மட்டக்களப்பு மாவட்டத்தில் கருவாடு உற்பத்தி அதிகரிப்பு



மட்டக்களப்பு மாவட்டத்தில் என்றுமில்லாதவாறு அதிகளவிலான கடல் மீன்கள் பிடிபடுவதால் மீன்களின் விலைகள் அதிகளவில் குறைவடைந்துள்ளன.

அதிகளவிலான கீரி மற்றும் அறுக்களா, பாரை மீன்கள் பிடிக்கப்படுவதால் மிகக்குறைந்த விலையில் பொதுமக்கள் மீன்களைக் கொள்வனவு செய்து வருகின்றனர்.

3 ஆயிரம் ரூபா வரை விற்பனையான ஒரு கிலோ அறுக்களா மற்றும் பாரை மீன்கள் தற்போது ஒரு கிலோ 1000 ரூபாவுக்கு விற்பனை செய்யப்படுகிறது.

600 ரூபாவாக விற்பனை செய்யப்பட்ட ஒரு கிலோ கீரி மீன் 200 ரூபாவாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இதனால் கருவாடு உற்பத்தி செய்வதில் மீனவர்கள் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

ஒரு கிலோ கீரி கருவாடு 600 முதல் 700 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அத்துடன் வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்படுவதாக மீனவர்கள் தெரிவித்தனர். (05)

# 120 பாடசாலை மாணவர்கள் 9 மாதங்களில் தொழுநோய்

## கொழும்பு, மட்டு மாவட்டங்கள் முதலிரு இடங்களில்

இலங்கையில் கடந்த 9 மாதங்களில், 14 வயதுக்கு உட்பட்ட 120 பாடசாலை மாணவர்கள் தொழுநோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என தொழுநோய் கட்டுப்பாட்டு இயக்கம் கூறுகிறது.

அதிக எண்ணிக்கையான மாணவர்கள் கொழும்பு மாவட்டத்திலிருந்து பதிவாகியுள்ளதுடன் அந்த எண்ணிக்கை 31 ஆகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த 18 பாடசாலை மாணவர்களும் கம்பஹா மாவட்டத்தைச் சேர்ந்த 11 மாணவர்களும் இந்த நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்த காலகட்டத்தில், முழு நாட்டிலும் 1150 தொழு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.(05)

## வீதி ....

(இரண்டாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்பில்மாநாட்டில்விசேடகவனம் செலுத்தப்பட்டதோடு, அதற்காகக் கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, சட்டம் மற்றும் ஒழுங்கு உள்ளிட்ட துறைகளின் பணிகள் தொடர்பிலும் பல சுற்றுப் பேச்சுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் மேலும் தெரிவித்ததாவது:

இந்த நிகழ்விற்காக அழைப்பு விடுக்கப்பட்ட வேளையில், வீதிவிபத்துக்களினால் ஏற்படும் மரணங்கள் மற்றும் அங்கவீனமடைதல் ஆகியவற்றை மட்டுப்படுத்துவதற்கான குழுவொன்றை நியமிப்பது தொடர்பில் ஆலோசித்தோம். அது தொடர்பாக ஜனாதிபதி அலுவலகத்தின் தலைமையின் ஜனாதிபதியினால் நிறுவப்பட்ட உயர்மட்டக்குழு தொடர்பில் கவனம் செலுத்தியுள்ளோம்.

இங்கு பல பிரச்சினைகள் உள்ளன. முதலில் கவனமின்றி வாகனம் செலுத்துதல். அடுத்தது நாம் பயன்படுத்தும் முச்சக்கரவண்டி போன்ற சில வாகனங்கள் உரிய பாதுகாப்பு தரம் உறுதிப்படுத்தப்பட்டதாக இல்லாமல் இருத்தல். ஒரே இரவில் செய்ய முடியாவிட்டாலும் மேற்படி சவாலை எவ்வாறு வெற்றிக்கொள்ள முடியும் என்பதை அறிய வேண்டும்.

பெருமளவான மக்களின் வாழ்வாதாரமாக முச்சக்கரவண்டியே காணப்படுகிறது. பலருடைய போக்குவரத்து தேவைகளும் அதன் மீதே தங்கியுள்ளன. அதனால் நாடு பொருளாதார ரீதியாக பலமடையும் வரையில் முச்சக்கர வண்டிகளை பாதுகாப்பான முறையில் பயன்படுத்துவதற்கான திட்டமொன்று அவசியம். அதற்காக சிறிது காலம் தேவைப்படும்.

அதேபோல் வீதிகளின் தன்மை தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். எமது நாட்டின் வீதிக் கட்டமைப்புக்கள் பெருமளவில் மேம்படுத்தப்படவில்லை. தெற்கு அதிவேக வீதியில் மழைக்காலத்தில் நீர் நிரம்பிவிடுகிறது.

உங்கள் வாகனத்தில் ஏதேனும் பிரச்சினை இருக்கும் பட்சத்தில் அல்லது வாகனத்தை செலுத்திச் செல்லும் போது ஏற்படும் தூக்கக் கலக்கத்தை போக்க வாகனத்தை சிறிது நேரம் தரித்துச் செல்வதற்கான தடமொன்று இருக்குமாயின் அச்சுறுத்தலான நிலைமை உருவாகாது.

அதேபோல் விபத்துக்கள் தொடர்பில் சட்டத்தை நடைமுறைப் படுத்தும் போதும் பிரச்சினைகள் எழுகின்றன. அவர்களுக்கு போதியளவில் பணிக்குழாம் இல்லாமை தொழில்நுட்பங்கள் இல்லாமை போன்ற பிரச்சினைகள் காணப்படுகின்றன. அவை அனைத்தும் தீர்க்கப்படும்வரையில் காத்திருந்தால் நமது பிரச்சினைகள் மேலும் உக்கிரமடையும்.

அவ்வாறாயின் நமக்கு இதற்கான குறுகிய கால, இடைக்கால மற்றும் நீண்டகால தீர்வுகள் அவசியமாகும். மேற்படி பணியை ஏற்றுக்கொள்ளும் குழு பல்வேறு விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்த வேண்டும். வாகன இறக்குதி தொடர்பான கொள்கை தயாரிப்பிற்கான ஜனாதிபதியினால் குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது. வாகன இறக்குமதி தொடர்பான திறந்த கொள்கையொன்று பின்பற்றப்பட வேண்டுமா அல்லது சிங்கப்பூரை போன்று வருடாந்தம் குறித்தளவு அனுமதிப் பத்திரங்களை மாத்திரம் பயன்படுத்தும் முறைமைக்குச் செல்ல வேண்டுமா என்பது தொடர்பில் ஆராய்கிறோம்.

அதேபோல் வீதிகளில் போக்குவரத்திற்காக ஈடுபடுத்தப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை பேணி வேண்டுமெனில் குறித்த தொகை வாகனத்தை நாட்டிலிருந்து அகற்ற வேண்டிய அவசியமும் உள்ளது. அத்தோடு வழமையான டீசல், பெற்றோல் வாகனங்களுக்கு மாறாக இலத்திரனியல் வாகனங்களின் பயன்பாடு குறித்தும் சிந்திக்க வேண்டும்.

இதன்போது எதிர்கால பொருளாதார நிலைமை மற்றும் வீதிகளின் நிலைமைகள் தொடர்பிலும் கவனம் செலுத்த வேண்டும். அதேபோல் வீதி விபத்து என்ற விடயமும் இங்கு முக்கியமானது. எனவே மேற்படி குழுவானது திட்டமிடலை தயாரிக்கும் முன்னதாக உரிய தரப்புக்களுடன் பேச்சு நடத்த வேண்டும். அதற்கான உரிய காலம் இதுவென்பதோடு, அதற்கான தகுந்த காலமும் இதுவாகும் என நம்புகிறேன்.

அதற்மைய வீதி விபத்துக்கள், அதனை அண்டிய இறப்புக்கள் மற்றும் அங்கவீனமடைதலை மட்டுப்படுத்த ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் துரித நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இது தொடர்பிலான மேலதிக பேச் இலங்கை மருத்துவச் சங்கத்தின், வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கான குழு மற்றும் ஜனாதிபதிக்கு இடையிலான சந்திப்பொன்று தற்போதும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்றும் தெரிவித்த சாகல ரத்நாயக்க இதற்காக நீண்டகாலமாக பாடுபடும் அனைவருக்கும் நன்றி கூறினார்.

நிகழ்வில் உரையாற்றிய வீதி விபத்துக்களை தடுப்பதற்கான நிபுணத்துவ குழுவின் தலைவர் பேராசிரியர் சமன் தர்மரத்ன தெரிவித்ததாவது:

கொழும்பு காலி முகத்திடல் ஹோட்டலில் நடைபெற்ற பாதுகாப்பான பாதைகள், பாதுகாப்பான குழந்தைகள் சர்வதேச மாநாட்டில் நேற்று கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

வீதி விபத்துக்களால் உலகின் ஏதாவது ஒரு இடத்தில் 42 செக்கன்களுக்கு ஒரு முறை இறப்புக்கு ஏற்படுகிறது. இருப்பினும் உயர் வருமானம் ஈட்டும் நாடுகளில் வீதி விபத்துக்கள் காரணமான ஏற்படும் இறப்புக்களின் எண்ணிக்கை மற்றைய நாடுகளுடன் ஒப்பிடுகையில் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது.

இலங்கையில் வீதி விபத்துக்கள் காரணமாக 2023 ஆம் ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் 115 சிறுவர் இறப்புகள் இடம்பெற்றுள்ளன. 15-44 இளைஞர்கள் வீதி விபத்துக்களில் இறக்கின்றமை அல்லது அங்கவீனமாவதை காண முடிகிறது. அத்தோடு வருடாந்தம் 3000 பேர் வீதி விபத்துக்களால் உயிரிழப்பதோடு அந்த எண்ணிக்கை வருடாந்தம் அதிகரிப்பை காட்டுக்கிறது.

அவற்றை ஒப்பீட்டளவில் பார்க்கும் போது எதிர்காலத்தில் ஆயிரக்கணக்கிலான இறப்புகளும், அங்கவீனமடைதலும் வீதி விபத்துக்களினால் நிகழ முடியும் என்பதோடு, அதனால் பலபில்லியன் ரூபாவை நாடு இழக்க நேரிடும்.

இந்த நிலையை கருத்தில் கொண்டு வீதி விபத்துக்களையும் அதனால் ஏற்படும் மரணங்கள் மற்றும் அங்கவீனம் அடைதலையும் கட்டுப்படுத்துவதற்கான செயலணியொன்றை உருவாக்க வேண்டும் என்றார்.

## வரி அறவீட்டை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த எதிர்ப்பு நடவடிக்கை தொடங்கப்பட்டபோது அங்கு வருகைதந்திருந்த பொலிஸார், பங்கேற்பாளர்களை அங்கிருந்து அகலுமாறு கோரிக்கை விடுத்திருந்தனர். அச்சமயத்தில் தொழில் வல்லுநர்களின் தொழிற்சங்க ஒன்றியத்தினர் பொதுமக்களுக்கு இடையூறு அளித்தால் மட்டுமே பொலிஸார் போராட்டத்தினை அகற்றலாம் என்று வாதிட்டனர். எனினும் பொலிஸார், நடைபாதையில் போராட்டம் செய்வதுகூட பொதுமக்களுக்கு இடையூறான விடயம்தான் என்பதைச் சுட்டிக்காட்டினார்கள்.

மருத்துவத்துறை, வங்கித்துறை, பல்கலைக்கழகம் உள்ளிட்ட 48 வகையான தொழிற்சங்கங்களின் அங்கத்தவர்கள் பங்கேற்ற இந்தப்போராட்டத்தின் போது, லோட்டஸ் வீதியிலிருந்து நிதி அமைச்சை நோக்கி நகருவதற்கு முயற்சித்தபோதும் அவர்களுக்கு அதற்கான அனுமதி பொலிஸாரால் மறுக்கப்பட்டது.

இந்நிலையில் அவர்கள் லோட்டஸ் வீதியின் ஆரம்பத்தில் தமது கவனயீர்ப்பு போராட்டத்தினை முன்னெடுத்ததோடு, பல்வேறு எச்சரிக்கைகளையும் விடுத்தனர்.

குறிப்பாக, பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் தொழிற்சங்கத்தின் ஊடகப்பேச்சாளரும், உபதலைவருமான சிரேஷ்ட விரிவுரையாளர் சாருத்த இலங்கசிங்க தெரிவிக்கையில்,

பொலிஸார் எம்மீது நீர்த்தாரைப் பிரயோகத்தினை மேற்கொள்வதற்கு தயாராகவே வருகை தந்துள்ளனர். முடிந்தால் எம்மீது ஒருசொட்டு நீரை தெளித்து பாருங்கள். நாம் போராட்டத்தினை ஆரம்பித்துள்ளமையானது தோல்வி அடைவதற்காக அல்ல. வெற்றி பெறுவதற்காகவே ஆகும் என்பதை அரசாங்கம் நினைவில் கொள்ள வேண்டும். அடுத்த ஆண்டு தேர்தல் ஆண்டு என்பதையும் மறந்து விட வேண்டாம் என்றார்.

## 2024க்கான....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களிடம் அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டுமக்கள் பொருளாதாரரீதியில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். மக்களை மென்மேலும் நெருக்கடிக்குள்ளாக்கும் வகையில் மின்சாரக் கட்டணம் தற்போது அதிகரிக்கப்பட்டுள்ளது.

ஆகவே மின்கட்டணம் மறுசீரமைக்கப்பட வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் வலியுறுத்தியுள்ளோம்.

உலக சந்தையின் விலைக்கு அமைய தேசியமட்டத்தில் எரிபொருள் விலையைத் தீர்மானிக்குமாறு எதிர்க்கட்சியினர் கடந்த காலங்களில் வலியுறுத்தின.

எரிபொருள் விலை சூத்திரத்துக்கு அமைய எரிபொருள் விலை ஒவ்வொரு மாதமும் நிர்ணயிக்கப்படும்போது அதற்கு எதிர்க்கட்சிகள் தற்போது எதிர்ப்பு தெரிவிக்கின்றன.

2024 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தை எதிர்வரும் 13 ஆம் திகதி பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவுள்ளார். பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்கும் வகையில் வரவு செலவுத் திட்டம் அமைய வேண்டும் என்பதை ஜனாதிபதியிடம் குறிப்பிட்டுள்ளோம்.

வரவு செலவுத் திட்டத்தை முழுமையாக ஆராய்ந்ததன் பின்னரே பாதீட்டுக்கு ஆதரவு வழங்குவதா, இல்லையா என்பதைத் தீர்மானிப்போம்.

சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்துவதற்காகவே பெறுமதிசேர் வரி அதிகரிக்கப்பட்டுள்ளதால் எதிர்வரும் காலங்களில் வாழ்க்கை செலவுகள் அதிகரிக்கும். இதனால் சமூக கட்டமைப்பில் பெரும் நெருக்கடிகள் ஏற்படும். ஆகவே நாட்டு மக்களின் நிலையில் இருந்துக் கொண்டு ஆட்சியாளர்கள் தீர்மானம் எடுக்கவேண்டும்.

2024 ஆம் ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நிச்சயம் இடம்பெறும். பொதுஜன பெரமுனவில் இருந்து விலகிச் சென்றவர்கள் மீண்டும் எம்முடன் இணைவார்கள். கூட்டணியாக ஒன்றிணைவோம் என்றார்.

## அரச ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரிகள் சங்கமாகிய நாம், விசேட பிரமுகர்களுக்கு வழங்குகின்ற நோயாளர் காவு வண்டிச் சேவை முதல் மருத்துச சிகிச்சை வழங்குகின்ற சேவைகள் வரையில் அனைத்தையும் ஒரு தொழிற்சங்க நடவடிக்கையை இன்று (நேற்று) முதல் ஆரம்பித்துள்ளோம்.

ஆட்சியாளர்கள் இலவச சுகாதாரதுறை மூலமாக இந்த நாட்டு மக்களின் உயிர்வாழும் உரிமையை உறுதிப்படுத்த வேண்டும் என்கின்ற விடயத்தினை உணரும் வகையில் எமது தொழிற்சங்கப் போராட்டத்தினை தீவிரப்படுத்துவதற்கு தீர்மானித்துள்ளோம்.

அத்துடன், நாளை (இன்று) முதல் மாகாண ரீதியான அடையாள வேலைநிறுத்த போராட்டத்தினை ஆரம்பிக்கவுள்ளோம். முதலாவதாக ஊவா மாகாணத்திலும், வெள்ளிக்கிழமை வடமாகாணத்திலும், அப்போராட்டம் முன்னெடுக்கப் படவுள்ளது.

அதேநேரம், எதிர்வரும் திங்கட்கிழமை வடமேல் மாகாணத்திலும், செவ்வாய்க்கிழமை சப்ரகமுவ மாகாணத்திலும், புதன்கிழமையன்று மத்திய மற்றும் கிழக்கு மாகாணங்களிலும் வியாழக்கிழமை தெற்கு மற்றும் மத்திய மாகாணத்திலும் தொழிற்சங்க நடவடிக்கைகளை தீவிரமாக முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம் என்றார்.

## பல்கலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கலா நிதி அதுலசிறி சமரக்கோன் தெரிவித்தார்.

அரச சேவையாளர்கள் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பினருக்கும் பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனத்திற்கும் இடையில் நேற்று கலந்துரையாடலொன்று நடைபெற்றது. இதன்போது அரச உழியர்களின் சம்பளப் பிரச்சினைகள் மற்றும் ஒன்றிணைந்த தொழிற்சங்க நடவடிக்கைகள் தொடர்பிலும் ஆழமாகக் கலந்துரையாடப்பட்டது.

இதனையடுத்து பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் சங்கங்களின் சம்மேளனத்தின் பொதுச்செயலாளர் கலாநிதி அதுலசிறி சமரக்கோன் ஊடகங்களுக்கு தெரிவித்ததாவது,

அனைத்துப் பல்கலைக்கழகங்களிலும் நாளையதினம் (இன்றையதினம்) அனைத்து கல்விசார் மற்றும் கல்வி சாரா ஊழியாகளும் வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர் என்பதை இந்தத் தருணத்தில் கூற விரும்புகின்றேன்.

அத்துடன், இந்தப் போராட்டத்தில் பங்கேற்பது தொடர்பில் தனியார் துறையினரின் நிலைப்பாட்டினையும் அறிய விரும்புகின்றோம். பொதுச்சேவையை முற்றாக ஒழிக்க வேண்டும் என்பதே ரணில் ராஜபக்ஷவின் நோக்கமாகவுள்ளது. அதற்கு நாம் எதிரானவர்கள் என்றார்.

இதேவேளை, அரசசேவையாளர்கள் தொழிற்சங்கங்களின் கூட்டமைப்பின் செயற்குழு உறுப்பினர் அநுராத செனவிரத்ன தெரிவிக்கையில், அரசாங்கத்தின் காட்டுச் செயற்பாடுகளுக்கும், தீர்மானங்களுக்கும் எதிரான நாம் ஒன்றிணைந்து தொழிற்சங்க நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கு தீர்மானித்துள்ளோம். ஆகவே அரசாங்கம் உரிய நடவடிக்கைளை வழங்குவதற்கு முன்வராதபோது அது தொடர்பில் தீவிரமான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்க நாம் தயங்கப்போவதில்லை என்றார்.

## அரச சேவையில்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அறிமுகப்படுத்தியுள்ளது.

30 சிரேஷ்ட அரச அதிகாரிகளுக்கான இந்த நிறைவேற்று மட்டப் புலமைப்பரிசில் திட்டத்தில் பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சந்திம விக்கிரமசிங்க, நியூசிலாந்து உயர்ஸ்தானிகர் மைக்கல் அப்பிள்டன், நியூசிலாந்தின் முன்னாள் சிவில்சேவை ஆணையாளர் இயன் ரெனி மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தி திட்டம் வதிவிடப் பிரதிநிதி அசுசா குபோட்டா ஆகியோரின் தலைமையில் கடந்த மாதம் 30 ஆம் திகதி அஹுங்கல்ல ஹெரெடேஜ் ஹோட்டலில் தொடங்கப்பட்டது.

நடைமுறைச் செயல்பாடு அடிப்படையிலான, அனுபவ கற்றல் முறைகளைப் பயன்படுத்தி இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு நவம்பர் 03 வரை நடைபெறும்.

2048 ஆம் ஆண்டளவில் அபிவிருத்தியடைந்த இலங்கையை கட்டியெழுப்புவதற்கு தேவையான அரச அதிகாரிகளை நாட்டில் உருவாக்கும் வகையில் ஜனாதிபதி செயலகம் மற்றும் பிரதமர் அலுவலகம் இணைந்து இந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்றன.

பல்வேறு அமைச்சுக்களில் பணிபுரியும் மேலதிக செயலாளர்கள் மற்றும் சிரேஷ்ட உதவிச் செயலாளர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட அதிகாரிகளை இலக்காகக் கொண்டு, எதிர்காலத்தில் அரசு அதிகாரிகளுக்கு வழங்கப்படும் பரந்த பங்கை வலியுறுத்தும் வகையில் இந்தத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் எதிர்கால அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்குத் தேவையான திறன்கள், அறிவு மற்றும் அணுகுமுறைகளுடன் அரச சேவையை வலுப்படுத்துவதே இந்தத் திட்டத்தின் நோக்கமாகும்.

தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள், இலங்கை மற்றும் உலகளவில் 7 நாடுகளில் உள்ள 95 உறுப்பினர்களைக் கொண்ட வலையமைப்பிலும், 900க்கும் மேற்பட்ட அரசாங்க அதிகாரிகளின் வலையமைப்பிலும் தங்கள் துறைகள் மற்றும் நிறுவனங்களுக்குள் புத்தாக்கம், மூலோபாய தொலைநோக்கு மற்றும் டிஜிட்டல் திறன்களை பரிந்துரைக்கின்றனர்.

இந்தத் திட்டத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள், உலகெங்கிலும் உள்ள மற்ற ஏழு நாடுகளைச் சேர்ந்த 95க்கும் மேற்பட்ட அரசு அதிகாரிகள் இந்த வலையமைப்புடன் இணைக்கப்படுவார்கள்.

தங்கள் சார்ந்த துறைகள் மற்றும் நிறுவனங்களுக்குள் மேற்கொள்ளப்படும் புத்தாக்கங்கள், மூலோபாய கொள்கைகள், டிஜிட்டல் திறன்கள் மற்றும் கருவிகள் தொடர்பில் இவர்கள் செயற்பட இருப்பதோடு 900 க்கும் மேற்பட்ட அரசு அதிகாரிகளை கொண்ட வலையமைப்புடன் தொடர்புபடுத்துவர்.

இந்தத் திட்டத்திற்காக, தற்போதுள்ள சிட்ரா கண்டுபிடிப்பு ஆராய்ச்சி நிறுவனத்திலுள்ள வளவாளர்களுக்கு மேலதிகமாக, அவுஸ்திரேலியா, அமெரிக்கா, இந்தியா மற்றும் மால்டோவா போன்ற நாடுகளைச் சேர்ந்த வளவாளர்களினதும் பங்களிப்பைப் பெற உள்ளனர்.

சிட்ரா இலங்கையின் முதல் சமூக புத்தாக்க ஆய்வகம் என்பதோடு இது ஜனாதிபதி அலுவலகம், பிரதமர் அலுவலகம் மற்றும் ஐக்கிய நாடுகளின் அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றின் கூட்டுத் திட்டமாக முன்னெடுக்கப்படவுள்ளது.

## மின்சார....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஈடுபட்டனர். இந்த போராட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்துக் கொண்டனர்.

இந்த போராட்டத்தில் கலந்துக் கொண்டதன் பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய ரஞ்சன் ஜயலால், மின்சார சபையை மறுசீரமைப்பதாக குறிப்பிட்டுக் கொண்டு மின்சார சபையின் கட்டமைப்பை 14 கூறுகளாக பிரித்து அதன் பெரும்பான்மை உரிமத்தை இந்தியாவின் அதானி நிறுவனத்துக்கு வழங்க அரசு தீர்மானித்துள்ளது, மின்சார சபையை மறுசீரமைக்கும் வகையில் சட்டமூலம் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது - என்றார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

மின்சார சபையை மறுசீரமைக்கும் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேறும். சுய அறிவில்லாத பொது ஜன பெரமுனவின் உறுப்பினர்கள் அதற்கு ஆதரவு வழங்குவார்கள். ஆனால் தீர்மானங்களை நடைமுறைப்படுத்த நாங்கள் ஒருபோதும் இடமளிக்கப் போவதில்லை.

மின்சார சபையின் சேவையாளர்களுக்கு சம்பளம் மற்றும் விசேட சலுகைகள் வழங்குவதற்காகக் கடன் பெற்றதால் மின்சார சபை நட்டமடைந்துள்ளது என்று குறிப்பிடுவதை ஏற்றுக்கொள்ள முடியாது. கடந்த மூன்று வருட காலமாக மின்சார சபையின் சேவையாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்படவில்லை.

நியாயமற்ற வகையில் மின்கட்டணம் சட்டவிரோதமான முறையில் அதிகரிக்கப்பட்டுள்ளது. இனி ஒவ்வொரு காலாண்டுக்கும் மின்கட்டணம் திருத்தம் செய்யப்படும் என மின்சாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

மின்கட்டணத்தை அதிகரிக்க வேண்டும் இல்லையேல் மின்விநியோக துண்டிப்பை அமுல்படுத்த நேரிடும் என்பதை தவிர மாற்றுத் திட்டங்கள் ஏதும் மின்சாரத்துறை அமைச்சருக்கு கிடையாது. நியாயமற்ற மின்கட்டண அதிகரிப்பால் ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டுள்ளார்கள். சிறு மற்றும் நடுத்தர தொழிற்துறை முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது.

ஆகவே மின்கட்டணம் குறைக்கப் படவேண்டும். மின்சார சபை சேவையாளர்களின் போராட்டத்தை முடிவுக்கு கொண்டு வருவதா அல்லது நீட்டிப்பதா என்பதை ஆட்சியாளர்களே தீர்மானிக்க வேண்டும். வரவுசெலவுத்திட்டத்தின் ஊடாக மின்கட்டண அதிகரிப்புக்கு ஒரு தீர்வினை வழங்காவிடின் அடுத்தக்கட்ட தீர்மானத்தை எடுப்போம் என்றார்.


JRIDE
BEYOND THE ROAD
ஜே ரைட்
ஒன்லைன் ரக்சி அப்
ONLINE TAXI APP FROM JAFFNA
ஆட்டோ கட்டணங்களால் ஆடிப்போயுள்ளீர்களா? கவலையினை விடுங்கள்.
நாங்கள் தயாராகிவிட்டோம்!
யாழ்ப்பாணத்தில் இருந்து உங்களுக்காக உருவாக்கப்பட்ட ரக்சி அப் (Taxi App)
உங்கள் பயணங்களை பாதுகாப்பானதாகவும் மகிழ்ச்சிகரமானதாகவும் செலவு குறைவாகவும் அமைத்துக்கொள்ளுங்கள்.
இப்போதே Play Store இல் இருந்து JRide - Beyond The Road App இனை இறக்கி உங்கள் தொலைபேசி இலக்கத்தை பயன்படுத்தி உங்கள் கணக்கை பதிவு செய்யலாம்!
YOU CAN
EASILY
REGISTER &
BOOK
YOUR RIDE
Google Play
App Store
+94 21 222 8358
JRIDE TAXI SERVICE
SPEED IT NET
பரமேஸ்வரா சந்தி,
136, பலாலி வீதி
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
+94 703 563213
www.jride.lk

காலைக்கதிர் Kalaikkathir

# தோப்பூர் பிரதேச வைத்தியசாலையின் சிற்றூழியர்களும் நேற்றுக் கவனவீர்ப்பு

திருகோணமலை - தோப்பூர் பிரதேச வைத்தியசாலையின் சிற்றூழியர்கள் நேற்று (புதன்கிழமை) தோப்பூர் பிரதேச வைத்தியசாலைக்கு முன்னாள் கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது கவனவீர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் 'எங்களுக்கான ஐந்து நாள் வேலைத் திட்டத்தை வழங்கு, மேலதிக நேர கொடுப்பனவை வரையறை இன்றி வழங்கு, சீருடை கொடுப்பணவை 15 ஆயிரம் ரூபாவாக அதிகரித்து வழங்கு, மின்சார கட்டண அதிகரிப்பை இரத்துச் செய், அரசே மருந்துத் தட்டுப்பாட்டை உடனடியாக நிவர்த்தி செய், விசேட கொடுப்பனவை 7,000 ரூபாவாக அதிகரித்து வழங்கு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து சுலோகங்களை ஏந்தியவாறு கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

தோப்பூர் பிரதேச வைத்தியசாலை சிற்றூழியர்கள்களின் கவனவீர்ப்பு போராட்டத்தால் வைத்திய சேவை பெற வருகை தந்த நோயாளர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.(05)




## காத்தான்குடி ஆதார வைத்தியசாலையின் ஊழியர்கள் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து ஆர்ப்பாட்டம்

சம்பள அதிகரிப்பு, சீருடைக்கான கொடுப்பனைவை அதிகரித்தல், மேலதிக நேரக் கொடுப்பனவு உட்பட பல்வேறு கோரிக்கைகளைமுன்வைத்துகாத்தான்குடிஆதாரவைத்தியசாலை சிற்றூழியர்கள் நேற்று (புதன்கிழமை) மதியம் கவனவீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

'லங்கா ஜனரஜ சுகாதார சேவைகள் சங்கம்' மட்டக்களப்பு கிளை தலைவர் கே.துரைசிங்கத்தின் தலைமையில் இவ்வைத்தியசாலையில் கடமைபுரியும் அனைத்து சிற்றூழியர்களும் பணி பகிஸ்கரிப்பை மேற்கொண்டு குறித்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

ஊழியர்களின் பணி பணிப்கிஸ்கரிப்பு மற்றும் போராட்டம் காரணமாக வைத்தியசாலையின் அலுவல்கள் குறிப்பிட்டநேரம் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)



## பருத்தித்துறை சுகாதாரசேவை தொழிற் சங்கம் சம்பள உயர்வு கோரி நேற்று ஆர்ப்பாட்டம்



சுகாதார ஊழியர்கள் நேற்று (புதன்கிழமை) சம்பள உயர்வு கோரி ஆர்ப்பாட்டம் ஒன்றை பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை முன்பாகமேற்கொண்டுஇருந்தனர். சம்பளம் 2016 இன் பின் அதிகரிக்கப்படவில்லை என்பதோடு, கிழமையினுல் ஐந்துநாள்கள் வேலை உள்ளிட்ட பல அம்ச கோரிக்கைகளை அடிப்படையாகக் கொண்டு 2023.11.01 ஆம் திகதி மு.ப. 7தொடக்கம்பி.ப. 12 வரை சுகாதார சேவை தொழிற் சங்க கூட்டணியாக போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர். (05)






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 02.11.2023இல் வெளியிடப்பெற்றது.